Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 பங்குனி-28 10-04-2005 ஞாயிற்றுக்கிழமை ஓசை 51



S.M கோல்ட் ஹவுஸ்

வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்


இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.

உரிமையாளர்:-
S.M. சண்முகரத்தினம்.

T.P: 024-222 4247 (சி-11481)

# புலிகளின் அரசியல் விவகாரக்குழுவினர்

# தென்னாபிரிக்காவிற்கு விஜயம்



## துணை அதிபரின் மூத்த ஆலோசகருடன் சந்திப்பு

(பிரிட்டோரியா)

**அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களின் தலைமையிலான அரசியல்விவகாரக் குழுவினர் நேற்று முன்தினம் தென்னாபிரிக்காவின் பிரிட்டோரியா சென்றடைந்தனர். அங்கு அவர்கள் அந்நாட்டின் துணை அதிபரின் மூத்த ஆலோசகரைச் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளனர்.**

தென்னாபிரிக்காவின் பிரிட்டோரியா சென்றடைந்த தமிழீழ அரசியல் விவகாரக் குழுவினரை அந்நாட்டின் துணை அதிபரின் மூத்த ஆலோசகர் இப்ரகிம் இப்ரகிம் வரவேற்றார்.

அவருடன் முன்னாள் தென்னாபிரிக்க பாதுகாப்பு அமைச்சர் ரொயில் மேயர், சனாதிபதி பாதுகாப்புப் பிரிவு அதிகாரி ஆண்ட்ரே ஜாய்மன் ஆகியோரும் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலானகுழுவினரை வரவேற்றனர். தங்களது ஐரோப்பிய, ஆபிரிக்க பயணத் தின் நோக்கம் குறித்தும் ஐரோப்பிய (12ஆம் பக்கம் பார்க்க)

## பூநகர் சோதனைச் சாவடி மீது தாக்குதல் நடத்தியோரில் மூவர் சிங்களவர்

(திருகோணமலை)

விடுதலைப் புலிகளின் திருகோணமலை பூநகர் சோதனைச் சாவடி மீது நேற்று முன்தினம் தாக்குல் நடத்தியவர்களில் மூவர் சிங்களவர்கள் என்பது அவர்களால் பிடிக்கப்பட்ட வேட்டைக்காரர் மூலம் அம்பல மாகியுள்ளது.

பூநகர்ப்பகுதியில் இருந்து வேட்டையாடக் காட்டுக்குச் சென்ற இருவர் கடந்த வியாழக் (12ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் கண்காணிப்புக்குழுவுடன் விடுதலைப்புலிகள் சந்தித்துப் பேச்சு

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி. எழிலனை சிறிலங்கா யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் நேற்றுச் சந்தித்துப் பேசினர். தமிழீழ விடுதலைப்புலிகளின் சம்பூர் அரசியல்துறை அலுவலகத்தில் இச்சந்திப்பு நடந்தது. இச்சந்திப்பின்போது விடுதலைப் புலிகளின் பூநகர் சோதனை அரண் மீதான தாக்குதல் குறித்து கண்காணிப்புக்குழுவினரிடம் எழிலன் விவரித்தார்.

மூதூர்-மட்டக்களப்பு வீதியில் மஹிந்தபுர இராணுவ முகாமிலிருந்து சுமார் 500 மீற்றர் தூரத்தில் விடுதலைப்புலிகளின் பூநகர் காவலரண் அமைந்துள்ளது. வெள்ளிக்கிழமை (12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்த்தேசியப் பற்றாளர் தில்லைக் கூத்தன் காலமானார்

(கொழும்பு)

மேல்மாகாண மக்கள் முன்னணியின் அரசியல் ஆலோசகரும், தமிழ்த் தேசிய பணிக்குழுவின் தலைவரும், பிரபல அரசியல் விமர்சகரும், ஐக்கிய நாடுகள் சபையின் சவூதி அரேபியா, சிங்கப்பூர், தெற்காசியாவிற்கான துறைமுக தரவியல் விஞ்ஞான துறையியல் முன்னாள் ஆலோசகருமான தில்லைக்கூத்தன் நேற்று முன்தினம் காலமாகியுள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## டோக்கியோ பிரகடனத்துக்கு அமைவான அரசின் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு

### -இந்தியப்பிரதமரிடம் ரணில் தெரிவிப்பு

(புதுடில்லி)

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கும் பொருட்டு டோக்கியோ பிரகடனத்துக்கு அமைய அரசாங்கம் எடுக்கும் எந்தவொரு முயற்சிக்கும் தமது கட்சி பூரண ஒத்துழைப்பை வழங்குமென சிறிலங்கா எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். இந்தியாவின் தலைநகரான புதுடில்லிக்கு சென்றுள்ள எதிர்க்கட்சித் தலைவர் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை நேற்று முன்தினம் சந்தித்தபோது இதனை அவர் குறிப்பிட்டுள்ளதாக சிறிலங்கா எதிர்க்கட்சித் (12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் சுனாமி நிவாரண நிதிப் பகிர்வு உலக வங்கி கணக்காய்வு செய்யும்

(கொழும்பு)

இலங்கையில் சுனாமி நிவாரண நிதி பகிர்ந்தளித்தல் குறித்து உலக வங்கி கணக்காய்வுகளை ஆரம்பித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட ஒரு இலட்சம் குடும்பங்களுக்கு மாதாந்தம் 5,000 ரூபா வீதம் நான்கு மாத காலத்திற்கு வழங்குவதற்கான தொகையை உலக வங்கி இலங்கைக்கு வழங்கியிருந்தது. எனினும் இத்தொகையை இரண்டு லட்சம் குடும்பங்களுக்கு பகிர்ந்தளித்ததனால் நான்கு மாதங்களுக்கான தொகை இரண்டு மாதங்களிலேயே முடிவடைந்துவிட்டது. உலக வங்கியினால் மதிப்பீடு செய்யப்பட்டதற்கு மாறாக இரண்டு இலட்சம் குடும்பங்களுக்கு இந்நிதியைப் (12ஆம் பக்கம் பார்க்க)

# அரசின் நடவடிக்கைகளுக்கு எதிராக

# கிளிநொச்சியில் ஆர்ப்பாட்டப் பேரணி!

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகளிடம் அரசு தன்னாட்சி அதிகாரசபையை வழங்கக் கோரியும், தமிழீழ விடுதலைப்புலிகள் மீதும், பொது மக்கள் மீதும் சிறிலங்காப் படையினரும் அவர்களுடன் இணைந்து இயங்கும் ஆயுதக்குழுக்களும் மேற்கொள்ளும் தாக்குதலைக் கண்டித்தும் கிளிநொச்சியில் மாபெரும் கண்டனப் பேரணி நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயமுன்றலிலிருந்தும் கிளிநொச்சி பண்பாட்டு மண்டப முன்றலிலிருந்துமென இரு முனைகளில் ஆரம்பிக்கும் பேரணி கிளிநொச்சி அரச செயலகத்தைச் சென்றடைந்து கண்டனக் கூட்டம் நடைபெற்று மனுக்களும் கையளிக்கப்படவுள்ளன. இக்கண்டனப் பேரணிக்கான அழைப்பினை கிளிநொச்சி மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்துள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதத்துடன் நுழைந்த இராணுவச் சிப்பாய் கைது

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள தங்கபுரம் என்னுமிடத்தில் அத்துமீறிப் பிரவேசித்த சிறிலங்கா இராணுவச் சிப்பாய் ஒருவர் விடுதலைப்புலிகளினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை பதினொரு மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றதாக திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் (12ஆம் பக்கம் பார்க்க)

# வரிவிளம்பரம்

## காணி விற்பனைக்கு

இரண்டு ஏக்கர் மேட்டு நிலம் நாற்பது பயன்தரு தென்னை மரங்களுடன் விசுவமடு அதிசய விநாயகர் ஆலயம் அருகாமையில் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு ஈழநாதம் பணிமனையுடன் தொடர்பு கொள்ளவும். (5983)

## வீடு விற்பனைக்கு

பரந்தன்-முல்லை வீதியில் புதுக்குடியிருப்பில் இருந்து 6 கிலோ மீற்றர் தொலைவில் தேவிபுரம் சந்திக்கு அண்மையில் ஒரு ஏக்கர் காணியில் கட்டுக் கிணற்றுடன் கூடிய கல் வீடு விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல: 2227586. (5984)

## மணமகன் தேவை

யாழ்.இந்துக் குடும்பத்தைச் சேர்ந்த 1973 இல் பிறந்த 8 செவ்வாய் உள்ள பெண்ணுக்கு மணமகன் தேவை. தகுதி தராதரம் பெரிதாக எதிர்பார்க்கப் படமாட்டாது. ஏனைய யாவும் நேரில பேசித் தீர்மானிக்கலாம். தொடாபுகளுக்கு:- 0112458073, 2227917 (5373)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

தேவசகாயம் யோசப் தவராசா என்பவருடைய தேசிய அடையாள அட்டை இல:-642582585V தியேட்டர் வீதி, இணுவில் என்ற முகவரி உடைய அடையாள அட்டை ஒன்று கண்டெடுக்கப்பட்டு மிருசுவில் மருத்துவமனைக்கு அருகிலுள்ள விதுசா தையல் கடையில் இருப்பதாகவும் சம்பந்தப்பட்டவர்கள் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளும் படியும் கேட்கப்பட்டுள்ளனர். (சி.11659)

## மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம்

வவுனியா மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு வவுனியா அரச அதிபர் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வவுனியா அரச அதிபர் சி.சண்முகம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்திஆனந்தன், சதாசிவம் கனகரட்ணம், வினோ நோகராதலிங்கம், சிவநாதன் கிஷோர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (10)

## வீதி அபிவிருத்தி கலந்துரையாடல்

வவுனியா மாவட்டத்திலுள்ள வீதிகளை அபிவிருத்தி செய்வது தொடர்பாக கலந்துரையாடல் நாளை பிற்பகல் 2.00 மணிக்கு வவுனியா அரச அதிபர் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வவுனியா அரச அதிபர் சி.சண்முகம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (10)

## கூட்டம்

கிளிநொச்சி மாவட்ட அத்தியாவசிய சேவைகள் குழுக்கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். இதில் உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கிளிநொச்சி அரசஅதிபர் கேட்டுள்ளார்.

# 106ஆம் நாள் நீங்காத நினைவலைகளில்...



**வேலாயுதம்பிள்ளை மல்லிகாமலர்**

மருதமண்ணில் முத்தாக
1966.06.08

ஆழிப்பேரலையில் வித்தாக:
2004.12.26

**வேலாயுதம்பிள்ளை இளவரசி**

மருதமண்ணில் முத்தாக
1995.03.29

பொங்கி வந்த பேரலைக்குள் சங்கமம்
ஆகிவிட்ட உங்களின் திருமுகம் காண
எங்கள் நெஞ்சமெல்லாம் ஏங்குகின்றது.
தாண்டவமாடிய பேரலைக்குள் நீங்கள்
தப்பிவர வேண்டும் என நாம் வேண்டிட
நம்மை வேதனையில் ஆழ்த்தி விண்ணுலகம் சென்றதேனோ...?

**10.04.2005 இன்று மருதங்கேணி முகாமில் நடைபெறும் எம் உறவுகளின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் வேண்டுகின்றோம்.**

தகவல்
மருதங்கேணி வடக்கு குடும்பத்தினர். (5977)

# முல்லைத்தீவில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்திற்கான

## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**பயிற்சி நெறியின் விபரங்கள்**

- ★ கட்டட நிர்மாணிப்பாளர்கள் (மேசன்/Masonry)
- ★ வீட்டு மின் இணைப்பாளர் (Electrician)
- ★ மீன்பிடி வெளியிணைப்பு இயந்திரம் திருத்துனர். (Out Boat Motor Mechanic)
- ★ அலுமினிய இணைப்பாளர். (Alluminium fiter)
- ★ இயந்திரவியல் தையல் பயிற்சி. (Mechanized carpentry)

**பயிற்சிக்காலம்**

மூன்று மாதம் தொடக்கம் ஆறு மாதம் உள்ளகப்பயிற்சியும் மூன்று மாதம் மேலதிக தொழிலுடன் இணைந்த பயிற்சியும் வழங்கப்படும்.

பயிற்சியின் போதுள்ள சலுகைகள்.

- ★ தொழில் வாய்ப்பை பெற்றுக் கொள்ளக் கூடிய தரமான பயிற்சி
- ★ பயிற்சிக்காலத்தில் பயிற்சியைத் தொடர்வதற்கான அடிப்படைக் கொடுப்பனவு மற்றும் போக்குவரத்திற்கான துவிச்சக்கர வண்டி வழங்கப்படும்.
- ★ தூர இருந்து வருபவர்களுக்கு தங்குமிடக் கொடுப்பனவு வழங்கப்படும்.
- ★ பயிற்சி முடிவில் சுயதொழில் ஆரம்பிக்கக்கூடிய ரூபா 8000.00 பெறுமதியான உபகரணத் தொகுதி.
- ★ பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு வேலைக்கான உத்தரவாதம்.

**இலக்கு குழு முன்னுரிமை**

- ★ இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டோர்.
- ★ யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மற்றும் இடம் பெயர்ந்த இளைஞர், யுவதிகள்.
- ★ குறைந்த குடும்ப வருமானத்தைக் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்தோர்
- ★ விசேட தேவைக்குட்பட்டோர்(வலுவிழந்தோர்).
- ★ பெற்றோரை இழந்தோர்.
- ★ கணவனை இழந்த குடும்பத் தலைவி.
- ★ சிறை மீண்டோர்.
- ★ யுத்த நடவடிக்கையில் இருந்து விடுபட்டோர்.

**வயதெல்லை**

17 தொடக்கம் 29 இற்கு இடைப்பட்டோர்.(பெண்களுக்கு விதிவிலக்களிக்கப்படும்)

**கல்வித் தகைமை:-**

குறைந்தது தரம் எட்டு ஐ பூர்த்தி செய்த எழுத, வாசிக்கத் தெரிந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

*விண்ணப்ப முடிவுத் திகதி :- 20.04.2005*

*விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-*

01) பொருண்மியமதியுரையகம், இரணைமடு, கிளிநொச்சி.

02) பொருண்மியமதியுரையகம், ஒட்டுசுட்டான், முல்லைத்தீவு.

03) வூஸ்க், துணைப்பணிமனை, முல்லைத்தீவு.

(11630)

# காணவில்லை




தருமபுரம் மகாவித்தியாலயத்தில் ஏழாம் ஆண்டில் கல்வி கற்கும் மாணவியான. நல்லதம்பி பாமினி (சுபா வயது-12) என்பவரை கடந்த 07.04.2005 காலை 8.00மணி முதல் காணவில்லையென தந்தையான செல்வம் தேடுகிறார். இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் பின்வரும் இடங்களில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தொடர்பு முகவரி:-
01)விசுவமடு காவல் பணிமனை,
02)உடையார்கட்டு மருதம் வாணிபம்.

**தகவல்:-செல்வம் (தந்தை).**

(சி.11673)

# சேவை நலன் பாராட்டு



**திரு.வேலுப்பிள்ளை ஐயம்பெருமாள்**
*(இலங்கை வங்கியின் வன்னிமாவட்ட முகாமையாளர்)*


**வங்கிச்சேவையில் ஆறைந்து வருடம்
வளமான பணியில் நிறைந்திவ் வருடம்
தங்க மகன் ஓய்வு பெறும் நாளினில்
உளமாற வாழ்த்துகின்றோம் ஐய(ா)
சித்திரை பத்தே இத்தரையில் நீவீர்
சிந்திய பணியில் சீரிய ஓய்வாம்~தினம்
செழுமை தந்திடும் மிகுதி நாட்களை
வாழ்த்தி நிற்பது வங்கி உறவுகள்.**

உதவிப் பொது முகாமையாளரும் (வட பிராந்தியம்)
ஊழியர்களும்,
இலங்கை வங்கி,
வடபிராந்திய காரியாலயம்,
யாழ்ப்பாணம்.

*முகாமையாளர்களும், ஊழியர்களும்,
இலங்கை வங்கிக்கிளைகள்
(கிளிநொச்சி, முல்லைத்தீவு, மாங்குளம், வவுனியா, மன்னார்)*

(சி.11626)

# ஐந்தாம் ஆண்டு நினைவுகளில்...



**மடியில் மைந்தனாய் 1983 - 06 - 29**

**மண்ணில் வீரனாய் 2000 - 04 - 10**

*2 ஆம் லெப்*

**சிலம்பரசன்**

**இரத்தினம் செந்தில்நாதன் (றேகன்)**

*சம்பவம்:- யாழ்.இத்தாவில் பகுதியில் ஓயாத அலைகள் - 03 தொடர் மோதலின் போது*

கொடும்பகையழித்து விதை குழியில் உறங்குகிறாய்
காலம் சொல்லும் சரித்திரத்தில் கல்மேல் எழுத்தாய் உன்நாமம்
ஈழம் வெல்லும் நாளினில் இமயத்தில் உயர்ந்து நிற்பாய்
ஆயிரமாண்டு ஆனாலென்ன அழியாத உன் நினைவுகளுடன்

இவருடன் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களையும் இந் நாளில் நினைவு கூருகின்றோம்.

அம்மா, சகோதர, சகோதரிகள்.

தகவல்:- அக்கா,
திருமதி. ஜெயக்குமார்,

(சி.11674)

# இளவரசர் சார்ல்ஸ் கமீலா திருமணம் மேற்கு லண்டனில் சிறப்புற நடைபெற்றது



(லண்டன்)

30 வருடங்களாக கமீலாவுடன் நட்புக் கொண்டிருந்த பிரித்தானிய இளவரசர் சார்ள்ஸ் சிற்கும், கமீலாவிற்கும் நேற்று திருமணம் இடம் பெற்றது.

மேற்கு லண்டனில் வின்சன் மாளிகையில் இடம்பெற்ற இவர்களது திருமண நிகழ்வில் எலிசபெத் ராணியும் கலந்து கொண்டார்..

புனித ஜோர்ஜ் தேவாலயத்தில் இடம்பெற்ற திருமணச் சடங்குகள் சுமார் இருபது நிமிடங்கள் இடம்பெற்றன.

இளவரசர் சார்ள்சின் புதல்வர் வில்லியம் மற்றும் கமீலா பாக்கரின் புதல்வர் ரொம் ஆகியோர் சாட்சிகளாகக் கையொப்பமிட்டனர்.

திருமண வைபவத்திற்கு விசேட பாதுகாப்பு வசதிகளும் செய்யப்பட்டிருந்தன. சுமார் 15 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் வீதியின் இருமருங்கிலும் இருந்தவாறு இவர்களை ஆசிர்வதித்தமை குறிப்பிடத்தக்கது.



சார்ள்ஸ்- கமீலா திருமண நிறைவில் தம்பதியருக்கு கையசைக்கும் இங்கிலாந்து மக்கள்

# இஸ்ரேல்–சிரியா அதிபர்கள் வத்திக்கானில் சந்தித்தனர்

(ஜெருசலேம்)

இஸ்ரேல், சிரியா ஆகிய இரு நாடுகளும் எதிர் எதிர் துருவங்களாக கடந்த பல ஆண்டுகளாக முரண்பட்டு வருகின்றன. இந்த நிலையில் இஸ்ரேல் அதிபர் மேஷே கத்சாவும், சிரியா அதிபர் பஷர் அல்-ஆசாத்தும் போப் பாண்டவர் இறுதிச்சடங்கு நிகழ்சியில் சந்தித்துக் கொண்டனர். அடுத்தடுத்த வரிசையில் அமர்ந்து இருந்த இருவரும் முதலில் ஒருவருக்கொருவர் 'காலை வணக்கம்' தெரிவித்துக் கொண்டனர். இறுதிச் சடங்கு நிகழ்ச்சி முடிந்ததும் இருவரும் கைகுலுக்கிக் கொண்டனர்.

இஸ்ரேல் வானொலி இந்தத் தகவலை ஒலி பரப்பியது.

# மரபணுவைத் திருடினார் இந்திய விஞ்ஞானி கைது

(ஹுஸ்டன்)

அமெரிக்காவிலுள்ள ஆய்வகத்தில் இருந்த மரபணுவைத்திருடிய இந்திய விஞ்ஞானி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தியா வைச் சேர்ந்தவர் சிங் லட்சுமண் மீனா33 வயதான இவர் உயிரியல் பேராசியர் ஆவார். அமெரிக்காவில் ஆராய்ச்சிகளை மேற் கொள்வதற்காக இவரை மத்திய அரசு அந்த நாட்டுக்கு அனுப்பிவைத்தது.

மத்திய புளோரிடா பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி விஞ்ஞானியாக இருந்த அவர் அந்தப் பல்கலைக்கழ ஆய்வுக்கூடத்தில் இருந்து மரபணுக்களைத் திருடி விட்டதாக உயிரியல் மருத்துவ அறிவியல் துறை துணை வேந்தர் பொலிஸில் புகார் செய்தார்.

பொலிசார் அவரைக் கைது செய்தனர். இந்தியாவுக்குத் திரும்புவதற்கு அவர் திட்டமிட்டு இருந்த நிலையில் இரண்டு நாட்களுக்கு முன்பு கைது செய்யப்பட்டார்.

# போப்பாண்டவருக்கு புனிதர் பட்டம்; வழங்குமாறு கோரி ஆர்ப்பாட்டம்

(வத்திக்கான்)

**போப்பாண்டவர் இரண்டாம் ஜோன் போலுக்கு புனிதர் பட்டம் வழங்குமாறு கோரி போப்பின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட பல இலட்சக் கணக்கான போலந்து மக்கள் ஆர்ப்பாட்டம் செய்ததாக வத்திக்கான் தகவல்கள் தெரிவிக்கின்றன. போப் நேற்று முன்தினம் உலகில் இருந்து விடைபெற்றமை குறிப்பிடத்தக்கது**

போப்பாண்டவர் இரண்டாம் ஜோன்போலின் இறுதிச் சடங்கு நிகழ்ச்சியின் போது புனித பீற்றர்ஸ் சதுக்கத்தில் மட்டும் மூன்று லட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் திரண்டு இருந்தனர். போலந்து நாட்டைச் சேர்ந்தவர்கள் கையில் சிவப்பு - வெள்ளை நிறக் கொடிகளை ஏந்தி தங்கள் மண்ணில் மைந்தருக்கு 'பிரியா விடை' கொடுத்தனர்.

ஒரு கட்டத்தில் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் "போப் இரண்டாம் ஜோன்போலுக்கு உடனடியாக புனிதர் பட்டம் வழங்க வேண்டும். என்று கோரி கோஷங்களை முழங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடத் தொடங்கி விட்டனர். ஏழு நிமிட நேரம் இந்த ஆர்ப்பாட்டம் நீடித்தது.



வாடிகன் புனித பீற்றர் சதுக்க வளாகத்தில் போப்பிற்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக உலகெங்கும் இருந்து லட்சக்கணக்கில் மக்கள் கூடினர்.

# சூரிய மண்டலத்திற்கு வெளியே ஒரு கிரகம் ஜேர்மன் விஞ்ஞானிகள் படம் பிடித்தனர்

(பேர்லின்)

சூரிய மண்டலத்திற்கு அப்பால் ஜிகியூலூப் என அழைக்கப்படும் இன்னொரு சூரியன் உள்ளது. இது பூமி சுற்றி வரும் சூரியனை விட இளமையானது. இந்த இரண்டாவது சூரியனை ஒரு கிரகம் சுற்றி வருகிறது. அதை ஜேர்மனி வானியல் வஞ்ஞானிகள் படம் பிடித்துள்ளனர்.

இந்தக் கிரகம் 1999ஆம் ஆண்டு முதல் விஞ்ஞானிகளால் கண் காணிக்கப்பட்டு வருகிறது.

இந்தக் கிரகம், ஜிகியூலூப் சூரியனில் இருந்து வெகு தொலைவில் உள்ளது. சூரியனுக்கும், பூமிக்கும் உள்ள தூரத்தை விட 100 மடங்கு தூரத்தில் இது உள்ளதாம்.

## பயணத்தில் சாதனை

(வத்திக்கான்)

இதுவரை பதவி வதித்த போப் பாண்டவர்களில் உலக சுற்றுப் பயணத்தில் சாதனை படைத்தவர். இரண்டாம் ஜோன்போல் 126 நாடுகளுக்கு மேல் சென்ற அவர் பயணம் செய்த தூரம் ஏறத்தாழ இந்தப் பூமியை 30 முறை சுற்றி வந்ததற்கு சமமாகுமாம்.


ஆனால், அவருடைய இறுதிப் பயணம் மிக குறைந்த தூரமே யாகும்.

# போப்பின் சவப்பெட்டிக்குள் வைக்கப்பட்ட பொருட்கள்

போப்பின் உடல் வைக்கப்பட்ட சவப்பெட்டி மீது சிலுவைக்குறியும், மேரி மாதாவை குறிக்கும் 'எம்' என்ற ஆங்கில எழுத்தும் இடம் பெற்று இருந்தது. சவப்பெட்டியை மூடி 'சீல்' வைப்பதற்கு முன்பு வெள்ளை நிறப் பட்டுத்துணி அவருடைய முகத்தின் மீது மூடப்பட்டது. போப்பின் தொப்பி அவருடைய மார்பு மீது வைக்கப்பட்டது.

போப்பாண்டவரின் உடலுடன் அவருடைய வாழ்க்கைக் குறிப்பு, நினைவுப் பதக்கங்கள், பதவி ஏற்றபோது வெளியிடப்பட்ட நாணயங்கள் போன்றவை ஒரு பேழைக்குள் அடைத்து வைக்கப்பட்டன.

## நடிகருடன் ஜாக்ஸன் தகாத உறவு சமையல்காரர் பரபரப்பு சாட்சியம்



(சாந்தாமரியா)

பிரபல பொப்பிசைப் பாடகர் மைக்கேல் ஜாக்ஸன் சிறுவர்களை மயக்கி தகாத உறவு வைத்திருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டது. இது தொடர்பாக அவர் மீது பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கு விசாரணை கலிபோர்னியாவிலுள்ள சாந்தாமரியா நீதிமன்றில் நடக்கிறது. இந்த நிலையில் நடிகர் ஒருவருடன் ஜாக்சன் தகாத உறவு கொண்டதாக மைக்கேல் ஜாக்ஸன் வீட்டில் சமையல்காரராகப் பணிபுரிந்த பிலிப் லீமார்க் என்பவர் நீதிமன்றில் ஆஜராகி சாட்சியம் அளித்துள்ளார்.

# மாரியானா தீவில் எரிமலை வெடித்துச் சிதறியது

(சாய்பான்)

வடபசுபிக் பெருங்கடலில் அமைந்துள்ள மரியானாதீவுக்கூட்டத்தில் அனாடஹன் தீவில் செவ்வாய்க்கிழமை எரிமலை வெடித்துச் சீறியது. எரிமலைவெடித்ததில் 15,000 மீற்றர் உயரத்துக்கு அதன் புகை பரவியது. சுமார் 70,000பேர் வாழ்ந்துவரும் இத்தீவில் எரிமலைச் சீற்றத்தால் உயிர்ச்சேதம் ஏதும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# ஈ-ராக்கில் புதிய சனாதிபதி சதாம் ஹுசைன் அதிர்ச்சி

(பாக்தாத்)

ஈராக்கின் பாராளுமன்றத்தில் புதிய சனாதிபதி தேர்ந்தெடுக்கப்பட்டமை தொலைக் காட்சியில் நேரடி ஒளிபரப்புச் செய்யப்பட்டது. அதை சதாம் ஹுசைன் பார்த்து அதிர்ச்சி அடைந்துள்ளார்.

ஈராக் பாராளுமன்றத்திற்கு சமீபத்தில் தேர்தல் நடந்தது. இதில் குர்திஷ் மக்களின் கட்சியும், ஷியா முஸ்லிம்களின் கட்சியும் பெருவாரியான இடங்களைப் பிடித்தன.

ஈராக்கின் புதிய அதிபராக குர்திஷ் தலைவர் ஜலால் தல பானியும் இரண்டு துணை சனாதிபதிகளும் போட்டியின்றித் தேர்ந்து எடுக்கப்பட்டனர்.

இந்தத் தேர்தல் ஈராக் தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்புச் செய்யப்பட்டது. சிறையில் இருந்த சதாம் ஹுசைன் இதைப் பார்த்து அதிர்ச்சியடைந்தார்.

இந்தத் தகவலை மனித உரிமைக்கான அமைச்சர் பக்தியார் அமீன் நிருபர்களிடம் தெரிவித்தார்.

## நேபாள இராணுவம் அதிரடி 18 மாவோயிஸ்டுகள் பலி

(காத்மண்டு)

நேபாளத்தில் இராணுவத்தினரின் அதிரடித் தாக்குதலில் 18 மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

நேபாளத்தில் மன்னர் ஞானேந்திராவை எதிர்த்து மாவோயிஸ்டுகள் வன்முறையில் ஈடுபட்டு வருகின்றனர். நாட்டில் ஜனநாயக ஆட்சியைக் கொண்டு வரவேண்டும். அவசர காலச் சட்டத்தை விலக்க வேண்டும் என்று பல்வேறு கோரிக்கைகளை அவர்கள் முன் வைத்துள்ளனர்.

மாவோயிஸ்டுகளை ஒடுக்க இராணுவத்தினருக்கு முழு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. தலைநகர் காத்மண்டுவில் இருந்து 550 கி.மீ தொலைவிலுள்ள ருக்கும் மாவட்டத்திலுள்ள ராணுவத் தலைமை அலுவலகம் மீதே மாவோயிஸ்டுகள் திடீர் தாக்குதல் நடத்தினர். இராணுவத்தினர் உடனடியாகப் பதில் தாக்குதல் நடத்தினர்.

இதன் போதே மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் 18 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

# முல்லையில் பெரும் நெருக்கடிக்குள் வைத்திய சேவை;
# 15 வைத்தியர்கள் தேவைப்படுமிடத்து இருவரே பணி!

## -மாவட்ட பிரதி மாகாண சு.சே.பணிப்பாளர் தகவல்

(முல்லை)

**முல்லைத்தீவு மாவட்டத்தில் வைத்தியர்கள் பற்றாக்குறை பெரும் நெருக்கடிகளைத் தோற்றுவித்து வருவதாக முல்லை. மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி து.வி.ஜெயகுலராஜா தெரிவித்தார்.**

அவர் இது குறித்து மேலும் தெரிவித்துள்ளதாவது. முல்லைத்தீவு மாவட்டத்தில் பதினைந்து வைத்தியர்கள் தேவையாகவுள்ள நிலையில் இரண்டு வைத்தியர்கள் மட்டுமே கடமைபுரிந்து வருகின்றனர். இதனால் மக்களுக்கான வைத்திய சேவைகளை வழங்குவதில் பெரும் இடர்பாடுகள் ஏற்பட்டு வருகின்றது

மேலும் நிர்வாக அலுவலர் இல்லாமையால் நிர்வாக அலுவலகம் செயற்பட முடியாத நிலை காணப்படுகிறது. பிரதி மாகாண சுகாதார சேவைப்பணிமனையின் பயன்பாட்டிற்கென வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும் அதற்கான சாரதிகளும், எரிபொருளும வழங்கப்படவில்லை. அத்துடன் கணக்கு மேற்பார்வையாளர் வெற்றிடமும் நிரப்பப்படாதுள்ள[illegible]அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சிறிலங்கா ஆட்சியாளர் தமிழர் தாயகப் பகுதியில் போர்க் காலங்களில் மக்களுக்கான வைத்திய சேவைகளைப் புறக்கணித்து வந்த நிலை தற்போதைய சமாதான சூழலிலும் தொடர்வதானது தமிழ்மக்களைத் தொடர்ந்தும் நெருக்கடிகளுக்குள் வாழ நிர்ப்பந்திக்கும செயலாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (20)

## பொன்விழா நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி வன்னேரிக்குளம் மகாவித்தியாலய பொன்விழா நிகழ்வும், புதியகட்டடத்திறப்பு விழா நிகழ்வும் நாளை நடைபெறவுள்ளது.

வித்தியாலய முதல்வர் சு.தர்மரத்தினம் தலைமையில் பிற்பகல் 4.00 மணிக்கு ஆரம்ப மாகவுள்ள மேற்படி நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம பாடசாலை சமூகத்தினர் வேண்டியுள்ளனர். (சோ)

## போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவு முல்லையில் நடமாடும் சேவை

(முல்லை)

சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மக்களின் நன்மை கருதி கடந்த புதன், வியாழன் ஆகிய நாட்களில் முல்லைத்தீவு போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு பிரதேச செயலகத்தில் நடுவப்பணியகத்தின் போக்கு வரத்து கண்காணிப்புப் பிரிவினரால் மோட்டார் ஊர்திப் பதிவுகள்,குடும்ப அட்டைப் பதிவுகள், பயண அனுமதி ஆகிய மூன்று பிரிவுகளுக்கான நடமாடும் சேவை நாடாத்தப்பட்டது.

இதில் இப்பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட அதிகளவு மக்கள் பயன்பெற்றனர். மோட்டார் ஊர்திப் பதிவுகள் மற்றுமொரு நாளிலும் நடைபெற உள்ளதாகவும் முல்லைத்தீவு போக்குவரத்துக் கண்காணிப்பு பிரிவு செயலகத்தினர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (20)

## இளையோர் ஆற்றுகைத்திறன் ஊக்குவிப்புப் பிரிவு ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

"முல்லை மாவட்ட நுண்கலைக் கல்லூரியின் புதிய செயற்பாடாக இளையோர் ஆற்றுகைத்திறன் ஊக்குவிப்புப் பிரிவு" ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பிரிவின் தலைவராக இசைக்கலைமணி திருமதி சா.கமலகாந்தன் செயற்படவுள்ளார். வள ஒருங்கிணைப்பு நிர்வாகம் திருமதி தே.வனஜாவும், நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர்களாக ஜெசிந்தன் , பெ.ஸ்ரீபன் ஆகியோரும் செயற்படவுள்ளனர். முல்லை மாவட்ட பாடசாலை மாணவர் மட்டத்திலான இளம் கலைஞர்களின் ஆற்றுகைத்திறனை வளர்த்தெடுப்பதையும், ஊக்குவித்தலையும் தனது இலக்காகக் கொண்டு இப்பிரிவு செயற்பட இருக்கின்றது. என்பதனை நுண்கலைக் கல்லூரியின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (சோ)

## திருக்குறள் நூல் வெளியீடு

(அலுவலக செய்தியாளர்)

"மாணவர் வாழ்வில் திருக்குறள்" நூல் தொகுக்கப்பெற்று இரண்டாம் பதிப்பாக வெளிவந் துள்ளது.

மாணவர்களினதும், ஏனையோர்களினதும் வேண்டுகைக் கமைவாக இந்நூல் இரண்டாம் பதிப்பாக வெளி வந்துள்ளது.

இந்நூலினை சகல பொத்தகசாலைகளிலும், தமிழ் சங்கத்திடமும் பெற்றுக் கொள்ளலாமென வெளியீட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (சோ)

## போராளிகள்-பொதுமக்கள் இணைந்து சிரமதானப் பணிகளை முன்னெடுக்கத் திட்டம்

(விசுவமடு)

விசுவமடுப் பிரதேசத்தில் கிராம மக்கள்- போராளிகள் கூட்டாக இணைந்து சிரமதானப்பணிகளை முன்னெடுக்கவுள்ளனர். இது தொடர்பான முன்னோடிக் கலந்துரையாடல் கடந்த செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு விசுவமடு மாவீரர் மண்டபத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத் துணைப் பொறுப்பாளர் சு.சின்னண்ணா தலைமையில் இடம்பெற்றது.

அரசாங்கத் திணைக்களங்களால் இப்பிரதேசத்தில் நீண்ட காலமாக மேற்கொள்ள வேண்டிய வேலைகள் மேற்கொள்ளப்படாத காரணத்தால் குறிப்பாக வீதிகள் கழிவு நீர் பாயும் வாய்க்கால்கள் புனரமைப்பு மேற்கொள்ளாத காரணத்தால் இப்பகுதியில் வாழும் விவசாயிகள் உட்பட மக்களும் பல நெருக்கடிகளைச சந்தித்து வருகின்றனர் என இப்பகுதிக் கமக்கார அமைப் பினர் தமிழீழ பொருண்மியமேம் பாட்டு நிறுவனத்தினருக்கு முறையிட்டதைஅடுத்து தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் இக்கருத்தரங்கு ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

கலந்துரையாடலில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுபபாளர் சி.கரிகாலன், துணைப் பொறுப்பாளர் சு.சின்னண்ணா, கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவாணன்- மற்றும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கிளிநொச்சி மாவட்டபொறுப்பாளர் செந்தில், முல்லைத்தீவு மாவட்டப் பொறுப்பாளர் அணியழகன், விசுவமடு காவல் துறைப்பணிமனை பொறுப்பாளர் ரகுராம், விசுவமடு அரசியல் துறைப்பொறுப்பாளர் சோழ நிலவன், பெண்கள் மேம்பாட்டு நிறுவ னத்தினர், மற்றும் துறைசார் பொறுப்பாளர்கள், இணைப்பாளர்கள், கமக்கார அமைப்பு பிரதிநிதிகள், விவசாயிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (46)

## இன்று புதுக்குடியிருப்பில் பொது மருத்துவ சிகிச்சை

இங்கிலாந்திலிருந்து வருகை தந்திருக்கும் பொது மருத்துவ நிபுணர் ஜெகராஜா அவர்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த தனியார் மருத்துவமனையில் பொது மருத்துவம் சார்ந்த நோய்களுக்கு சிகிச்சை வழங்கவுள்ளார். சலரோகம், உயர்குருதி அழுத்தம், இதய வருத்தம், தொய்வு போன்ற நோய்களுக்கு சிகிச்சை வழங்கப்படவுள்ளது. பயன்பெற விரும்புவோர் வெளி நோயாளர் பகுதியுடன் தொடர்பு கொள்ளவும். (08)

## சிறார்களின் விளையாட்டு விழா

வவுனியா மாவட்டத்தில் மரக்காரம்பளையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் நடாத்தப்பட்டுவரும் ஐங்கரன் முன்பள்ளியும் சமூக அபிவிருத்தி நிறுவனங்களின் சம்மேளன நிறுனத்தினால் நடாத்தப்பட்டு வரும் கலைவாசம் முன்பள்ளியும் இணைந்து நடாத்திய முன்பள்ளி சிறுவர்களுக்கான விளையாட்டு விழா நிகழ்ச்சி கடந்த நான்காம் திகதி நடைபெற்றது. நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக வருகை தந்திருந்த மரக்காரம்பளை பாடசாலை அதிபர்



திருமதி அருணாசலம் மங்கள விளக்கேற்றி நிகழ்வுகளை தொடக்கிவைத்தார். தொடர்ந்து சிறுவர்களுக்கான உடற்பயிற்சிகள் ஓட்டப்போட்டிகள் பூக்கோர்த்தல் போன்ற விளையாட்டுப்போட்டிகள் நடைபெற்றன.

நிகழ்வில் சமூக அபிவிருத்தி நிறுவனங்களின் சம்மேளன இணைப்பாளர் செல்வி. அருந்ததி தமிழர் புனர்வாழ்வுக்கழக பிரதேச இணைப்பாளர் செல்வி விஜயகுமாரி ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வின் இறுதியில் மரக்காரம்பளைப் பாடசாலை அதிபர் வெற்றிபெற்ற மற்றும் பங்குபற்றிய அனைத்து மாணவர்களையும் பாராட்டி உரையாற்றியதுடன் அவர்களுக்கு பரிசில்களையும் வழங்கிக் கௌரவித்தார். மரக்காரம்பளை முன்பள்ளி மைதானத் தில் வவுனியா மாவட்ட தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் இடம்பெற்ற இந் நிகழ்வுகள் பிற்பகல் 1.00மணியளவில் சிறுவர்களின் உற்சாக நிகழ்ச்சிகளுடன் இனிது நிறைவு பெற்றது.

## -தமிழீழ நுண்கலைக்கல்லூரியில் நடாத்தப்பட்ட- மாகாணமட்ட ஓவியப் போட்டிகளில் வெற்றிபெற்றோர் விபரம் வெளியீடு

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ நுண்கலைக் கல்லூரியினால் வடக்கு கிழக்கு மாகாணரீதியாக நடாத்தப்பெற்ற ஓவியப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் மற்றும் ஆறுதல் பரிசில்களைப் பெற்றவர்களது பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளது.

இவர்களுக்கான பரிசில்களும், சான்றிதழ்களும் இம்மாத இறுதிக்குள் கிளிநொச்சியில் தமிழீழ நுண்கலைக் கல்லூரியினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பிரத்தியேகமான விழாவின் போது வழங்கப்பவுள்ளதென தமிழீழ நுண்கலைக்கல்லூரி பணிப்பாளர் க.தணிகைமாறன் தெரிவித்துள்ளார்.

**பரிசில்கள் பெறுவோர் விபரம் வருமாறு,**

**கீழ்ப்பிரிவு**

1ஆம் இடம்:-நாகராஜா.ஜெயஸ்ரீ தரம்-07,கிளி/மத்திய மகாவித்தியாலயம், 2ஆம் இடம்:-செல்லையா.செந்தீபன் 04ஆம் வட்டாரம் முள்ளியவளை முல்லைத்தீவு, 3ஆம் இடம் இரவீந்திரநாதன்.சோபிகா தரம்-07 கிளி/ மத்திய மகாவித்தியாலயம்,

**ஆறுதல் பரிசுகள**

கிருஷ்ணகுமார்.கீர்த்தனா கிளிநொச்சி, பரமேஸ்வரன்.ஆரணன் முள்ளியவளை, தெய்வேந்திரமூர்த்தி. பகீரதன் கிளிநொச்சி, கணேசன். சங்கவி கிளிநொச்சி, ஜெகதீஸ்வரன். கமலேந்திரன் கிளிநொச்சி, பாக்கியராசா.யசோதினி கிளிநொச்சி, தனராஜ். தினேஸ் ஓட்டுசுட்டான், சகுந்தலா. சண்முகம் செஞ்சோலை வள்ளிபுனம், கிளிஸ்டோபர் எனட் ஜெரோன் கிளிநொச்சி, ப.ரினோசன் கிளிநொச்சி, வைகை செல்வராஜா செஞ்சோலை வள்ளிபுனம், தங்கராஜா பகீரதன் கிளிநொச்சி, டிலக்சினி ரட்ணம் செஞ்சோலை வள்ளிபுனம், சசிக்குமார் ஜெயரோஸ் கிளிநொச்சி, கதிர்காமநாதன் டனார்த்தன் கிளிநொச்சி.

**மத்தியபிரிவு**

1ஆம் இடம்:- ரூபிகா.கிருபானந்தன் 36A அரசடிவீதி நல்லூர் யாழ்ப்பாணம், 2ஆம் இடம்:- கருணாகரன். கிருஷாந்தன் குலவர்தரை அளவெட்டி, 3ஆம் இடம்:- மனோ கரன். நியூசிகன் உடையார்கட்டு மகாவித்தியாலயம் உடையார் கட்டு,

**ஆறுதல் பரிசுகள்:-**

ரவிச்சந்திரன்.பகீரதி-சிறப்பு ஆறுதல் பரிசு செஞ்சோலை வள்ளிபுனம், சரவணபவன். உமாப் பிரியா உடையார்கட்டு, பற்குணராஜா. ராம்ராஜ் யாழ்ப்பாணம், ஸ்ரீதரன்.யசோதாராணி உடையார்கட்டு,யசிதரன். பாலசிங்கம் உடையார்கட்டு, விக்கினராஜா.கபில்தேவன் கிளிநொச்சி, ஸ்ரீஸ்கந்தராஜா.துஸ்யந்தன் முள்ளியவளை, இரவீந்திரன் கமில்டன் நல்லூர், சச்சிதானந்தம் தேவானந யாழ்ப்பாணம், பாக்கியராசா இதயகுமார் கிளிநொச்சி, எட்வின் குலராசா லக்ஷன் கிளிநொச்சி, சண்முகலிங்கம் நிரோஜன் யாழ்ப்பாணம், மா.புஸ்ப குமார் ஒட்டுசுட்டான், பாலசிங்கம் சதீஸ்வரன் யாழ்ப்பாணம், பஞ்சாட்சரம் ஜெயராம் தெல்லிப் பளை.

**மேற்பிரிவு**

1ஆம் இடம்:- சாரூபா.சரவணபவன் 'தர்மபுரி' 3ஆம் கட்டை ஒழுங் கை கல்வியங்காடு யாழ்ப்பாணம், 2ஆம் இடம்:- இராஜநாயகம். ராஜ் குமார் ஏழாலை மத்தி ஏழாலை, 3ஆம் இடம் செண்பலிங்கம் ஜெகன் கோணாலைலேன் கொக்குவில் கிழக்கு கொக்குவில்.

**ஆறுதல்பரிசு:-**

அல்பிரட். கெமிலஸ் பென்சன்-சிறப்பு ஆறுதல் பரிசு புதுக்குடியிருப்பு, மயில் வாகனம் கணேசாந்தன்-சிறப்பு ஆறுதல் பரிசு நல்லூர், பாலசுப்பிரமணியம் பிரேமரஞ்சனா யாழ்ப்பாணம், கிருஷ்ணபிள்ளை ஜெகதீஸ்வரன் கிளிநொச்சி, பஞ்சாட்சரம் பானுசேகரன் தெல்லிப்பளை, செல்லத்துறை வசந்தகுமாரி நல்லூர், கண்ண தாசன் சந்திரசேகரன் புதுக்குடியிருப்பு, தர்மலிங்கம் தர்மநாத் உடை யார் கட்டு, பூபாலசிங்கம்.நிரஞ்சன் புதுக்குடியிருப்பு, சின்னத்துரை. ஜெகதீபன் கரவெட்டி, சிவகுரு திமுனா செஞ்சோலை-வள்ளிபுனம், அருளானந்தம் ஜெயரூபன் புதுக்குடியிருப்பு, சிவபுண்ணியம் நந்தகுமார் உடையார் கட்டு, கார்த்திகேயினி. திருநாவுக்கரசு சுன்னாகம், கறுப்பையா. யோகராஜ் உடையார்கட்டு. மேற்பிரிவில் சிறப்புப்பரிசு நவம் அறிவுக்கூடத்தைச் சேர்ந்த செல்வி தர்மலிங்கம் கௌரிக்கு வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## இரவு நேர கற்கை

(மல்லாவி)

துணுக்காய் பிரதேசத்தின் பின்தங்கிய கிராமமான தேறாங்கண்டல் பகுதியின் கல்வி அறிவை மேம்படுத்தும் நோக்குடன் ஊரக வளர்ச்சிப் பணி மூலம் மாணவர்களிற்கு தினமும் இரவு கற்கை நெறிகள் தேறாங்கண்டல் அ.த.க. பாடசாலையில் நடைபெற்று வருகின்றன. (24)

## பெண் உரிமை மீறல் விபரங்கள் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிலுள்ள அகதி முகாம்களில் வாழ்ந்து வரும் பெண்களுக்கு எதிராக இடம் பெறும் "பெண் உரிமை மீறல்கள்" தொடர்பான விபரங்களைச் சேகரிக்கும் நடவடிக்கைகளில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இடம்பெயர்ந்தோர் சேவைத் திட்டத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ் விபரச் சேகரிப்புக்கள் ஒவ்வொரு அகதி முகாம்களிலும் வாழும் தனிப்பட்ட ஒவ்வொரு பெண்களிடம் இருந்தும் படிவங்கள் மூலம் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

அகதி முகாம்களில் வாழும் பெண்களுக்கு எதிராக இடம்பெறும் உரிமை மீறல்களை இனங்கண்டு அவற்றை தடுத்து நிறுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவே இவ் விபரச் சேகரிப்புக்கள் இடம் பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

# வீதிபுனரமைப்புத் திட்டத்தை அமுலாக்க பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம்!

### யாழ்.அரச அதிபர் கணேஷ் வேண்டுதல்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.குடாநாட்டிலுள்ள ஆறு பிரதான வீதிகளைப் புனரமைத்து விஸ்தரிப்புச் செய்யும் திட்டங்களை அமுலாக்கும் போது அதற்கு பொது மக்களது ஒத்துழைப்புக்கள் அவசியம் என யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்துள்ளார்.**

யாழ்.குடாநாட்டின் பிரதான வீதிகளின் சீரின்மையால் ஏற்படும் விபத்துக்களையும், வீண் உயிரிழப்புக்களையும் தவிர்ப்பதற்காக இத்தகைய வீதி விஸ்தரிப்புத்திட்டம் ஜப்பான் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் நிதி உதவியுடன் அமுல்படுத்தப் படவுள்ளது.

இத்தகைய வீதிவிஸ்தரிப்பு நடவடிக்கைகளின் போது சம்பந்தப்பட்ட வீதி ஓரங்களில் உள்ளவீடுகள், பொதுக்கட்டடங்கள், வர்த்தக நிலையங்கள் என்பன அகற்றப்பட வேண்டிய நிலைமையுள்ளது.

எனவே யாழ்.குடாநாட்டின் அபிவிருத்தியையும் ஒட்டு மொத்த மக்களது நலனையும் கவனத்தில் கொண்டு இவ்வீதி விஸ்தரிப்பு எல்லைகளுக்குட்பட்டு வரும் கட்டடங்களை அகற்றி ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அரச அதிபர் மேலும் பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். இதன் மூலமே இவ்வீதி விஸ்தரிப்புத்திட்டத்தை திறம்பட அமுலாக்க முடியும் எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (33)

## சுனாமி அச்ச உணர்வால் மீன்பிடி மந்தநிலையில்!

(வடமராட்சி)

சுனாமி கடல் அனர்த்தம் தொடர்பான அச்ச உணர்வு தொடர்ந்தும் நிலவிவருவதால் வடமராட்சி கடற்பரப்பிலான மீன்பிடி தொடர்ந்தும் மந்த நிலையிலே இருந்துவருகிறது.

சுனாமி அனர்த்தத்தினை அடுத்து மீண்டும் கட்டுமரங்கள் மூலமான மீன்பிடி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எனினும் மீண்டும் சுனாமி தொடர்பான வெவ்வேறான தகவல்கள் வெளியானதையடுத்தே மீன்பிடியில் மந்த நிலை ஏற்பட்டுள்ளது. (27)

## கட்டாக்காலிகள் அதிகரிப்பு

(காரைநகர்)

யாழ்.காரைநகர்ப் பிரதேசத்தில் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லைகள் அதிகரித்திருப்பதால் அப்பகுதி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கால்நடைவளர்ப்போரது கவனமின்மையாலும், பிரதேச சபையினரது நடவடிக்கை இன்மையாலும் இக்கட்டாக்காலிகளின் தொல்லை அதிகரித்திருப்பது குறித்து விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

## அன்னை பூபதி நினைவு நிகழ்வுகள் யாழில் சிறப்புற அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

தியாக தீபம் அன்னை பூபதியின் நினைவு தினம் யாழ். குடாநாடெங்கிலும் மிகச் சிறப்பான முறையில் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

குறிப்பாக யாழ். குடாநாடெங்கிலுமுள்ள பொது இடங்கள், வர்த்தக நிலையங்கள் பாடசாலைகள், புலிகளின் அரசியல் துறைச் செயலகங்கள் என்பனவற்றில் அன்னை பூபதியின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டு வருகிறது.

அத்துடன் பொது அமைப்புக்கள் மற்றும் சமூக அமைப்புக்கள் கல்விசார் அமைப்புக்கள் என்பனவற்றின் ஏற்பாட்டில் பரவலாக சிரமதானங்களும் இடம்பெற்று வருகின்றன. (33)

## தனியார் காணிகளில் மணல் அகழ்ந்து பலப்படுத்தப்படும் தீவக படைமுகாம்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தீவகத்திலுள்ள வேலனை கடற்படைத்தளத்தை அண்மித்த பகுதிகளில் இருக்கும் தனியார் காணிகளில் இருந்து சிறிலங்கா கடற்படையினரால் மணல் மண் அகழப்படுவதாக அப்பகுதி மக்கள் முறையிட்டுள்ளனர்.

இப்பகுதியிலிருந்து அகழப்படும் மணலை தீவகத்திலுள்ள பல்வேறு பகுதிகளிலும் மேற்கொள்ளப்படும் சிறிலங்கா படைமுகாம்களின் பலப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதற்காக இராணுவ உழவு இயந்திரங்கள் மூலம் ஏற்றிச் செல்கின்றனர். இதனால் அப்பகுதிகளிலுள்ள காணிகளில் பாரிய குழிகள் தோன்றியுள்ளன.

சிங்களப் படையினரது இந்த நடவடிக்கை குறித்து அப்பகுதியிலுள்ள தனியார் காணிகளின் உரிமையாளர்கள் கடுமையான விசனத்தைத் தெரிவித்துள்ளன. (33)

## கோப்பாய் - கைதடி வீதியிலுள்ள இராணுவ முகாம் பலப்படுத்தப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோப்பாய் கைதடி வீதியிலுள்ள தரவைப் பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளில் சிறிலங்கா இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக இம் முகாமைச்சூழவுள்ள மண் அணைகளை புல்டோசர்களின் துணையுடன் பலப்படுத்தி புதிய முட்கம்பி வேலிகளையிட்டு வரும் சிறிலங்காப் படையினர் இம் முகாமைச் சூழவுள்ள இராணுவக் காவலரண்களையும் புனரமைத்து வருகின்றனர்.

இதனால் இப் பகுதி மக்கள் மத்தியில் பெரும் பீதி நிலவுகின்றது இதனால் இங்கு மக்களின் இயல்பு நிலையும் பாதிக்கப்பட்டு வருகிறது. (33)

## சுனாமி நிவாரணத்தில் முறைகேடு; பொதுமக்கள் குற்றச்சாட்டு

(வடமராட்சி)

சுனாமி கடற் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட மக்களிளுக்கு வழங்கப்படும் நிவாரணப் பொருட்களில் பெரும் முறைகேடுகள் இடம்பெற்று வருவதாக வடமராட்சியின் கரையோரப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். குறிப்பாக சுனாமி நிவாரணமெனக் கூறி ராணி சந்தனச் சவர்க்காரமும் டசின் கணக்கில் சிக் ஷம்பூ மற்றும் சலவைப் பவுடர் பக்கற்றுகளையும் தமக்கு திணித்து வருவதாகவும் அம்மக்கள் கூறுகின்றனர்.

சுனாமி கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட மக்களில் நபரொருவருக்கு வாரமொன்றிற்கு 375 ரூபாவினை அரசு நிவாரணமாக வழங்கிவருகிறது. அத்தொகையில் 175 ரூபாவிற்கு அரிசி,மா மற்றும் சீனி என்பவையும் எஞ்சிய இருநூறு ரூபாவில் ஏனைய அத்தியாவசிய பொருட்களைப் பெற்றுக்கொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. இந்த இருநூறு ரூபாவில் சமையலுக்கான ஏனைய உபபொருட்களை கொள்வனவு செய்ய முடியுமெனவும் கூறப்பட்டிருந்தது.

எனினும் பருத்தித்துறை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகளில் அத்தியாவசியமான சமையற்பொருட்களை வழங்க மறுக்கும் கிளைமுகாமையாளர்கள், அப்பணப் பெறுமதியில் தேவையற்ற பொருட்களை மக்களிற்கு திணித்து வருவதாகவும் கூறப்பட்டுகின்றது. குறிப்பாக பலாலி சேந்தாங்குளம் பகுதியிலிருந்துஇடம்பெயர்ந்த மக்கள் திக்கம் பகுதியை அண்டிய கரையோரக்கிராமங்களில் வாழ்ந்து வருகின்றனர். கடந்த 15 வருடங்களிற்கு மேலாக அகதி வாழ்வை வாழ்ந்து வரும் இம் மக்கள் சுனாமி கடல் அனர்த்தின் போது மீண்டும் அகதிகளாகியுள்ளனர்.

இந்நிலையில் தமக்கு வழங்கப்படும் சுனாமி நிவாரணத்தில் கூட இவ்வாறான முறைகேடுகள் மேற்கொள்ளப்பட்டு கொண்டு வருவதாக அம் மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். (27)

# யாழ்.தீவகக் கடற்பரப்பில் இந்திய மீனவர் அத்துமீறல்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.தீவகக்கடற்பரப்புக்களில் மீண்டும் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடத்தொடங்கியிருப்பதாக அப்பகுதிகடற்றொழிலாளர் கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு அத்துமீறி நுழைந்து மீன்பிடிக்க வரும் இந்திய மீனவர்கள் பாரிய மீன்பிடி விசைப்படகுகள், ரோலர்கள் போன்ற கடற்கலவகைகளுடன் வந்து இத்தீவகக் கடற்பரப்பில் இறால், கடலட்டை போன்றவற்றைப் பிடித்துச் செல்கின்றனர்.

இதனால் தீவகமீனவர்கள் இப்பகுதிக்குச்சென்று கடற்றொழிலில் ஈடுபடமுடியாத நிலை தோன்றியுள்ளது. எனினும் இதுவிடயத்தில் சிறிலங்கா கடற்படையினர் அக்கறை காட்டாது இருந்து வருவதாக அப்பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர். (33)

## வங்கி ஊழியர்கள் மனுத்தாக்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டிலுள்ள மக்கள்வங்கிக் கிளைகளில் பணியாற்றி இடைநிறுத்தப்பட்ட ஊழியர்கள், தமக்குத்தொடர்ந்தும் வேலை வழங்கக் கோரி கொழும்பு தொழில் நீதிமன்றில் வழக்குகளை தாக்கல் செய்துள்ளனர்.

நீண்ட காலமாக தற்காலிக ஊழியர்களாக கடமையாற்றிய இவர்கள் தம்மை பழிவாங்கும் நோக்கில் இடைநிறுத்தியதாக குற்றஞ்சாட்டியிருந்ததுடன், தமக்கு நியாயமான தீர்வொன்றை பெற்றுத்தர வேண்டும் என்று கோரி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்திலும் முறைப்பாடொன்றை அப்போது செய்திருந்தனர். எனினும்மீள அவர்களை வேலைக்கு இணைத்துக்கொள்வது தொடர்பான உறுதிமொழி எதனையும் வழங்காத நிலையிலேயே அவர்கள் தற்போது தொழில் நீதிமன்றில் வழக்குகளை தாக்கல் செய்துள்ளனர். (27)

## சுனாமியால் இடம்பெயர்ந்தோர் மழையினால் மீண்டும் இடம்பெயர்வு

(வடமராட்சி)

சுனாமி கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்டு முகாம்களில் வாழ்ந்து வரும் கரையோர மக்கள் கடந்த நாட்களில் பெய்த மழைகாரணமாக மீண்டும் இடம் பெயர்ந்துள்ளனர்.

குறிப்பாக சர்வதேச தொண்டமைப்புக்கள் பலவற்றாலும் வழங்கப்பட்டிருந்த தற்காலிக கூடாரங்களில் வசித்து வந்த குடும்பங்கள் பலவும் இடம்பெயர்ந்து அருகிலுள்ள உறவினர் வீடுகளில் குடியேறியுள்ளன.

குறிப்பாக பலாலி அதிஉயர் பாதுகாப்பு வலயம் காரணமாக இடம் பெயர்ந்த நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வடமராட்சியின் கரையோரக்கிராமமான திக்கம் பகுதியில் வசித்து வருகின்றன. கடந்த ஆண்டின் இறுதியில் ஏற்பட்ட சுனாமி கடற்கொந்தளிப்பின் போது அவர்களது குடியிருப்புக்கள் அனைத்தும் அழிவிற்குள்ளாகியிருந்தன.

இதனையடுத்து இடம் பெயர்ந்து பாடசாலைகளிலும் ஆலயங்களிலும் வசித்துவந்த மக்கள் அச்சம் காரணமாக மீளக்குடியேறாத நிலையில் சர்வதேச தொண்டமைப்புக்களின் உதவியுடன் தற்காலிக கூடாரங்கள் வழங்கப்பட்டு கடற்கரையிலிருந்து 300 மீற்றர் தூரத்திற்கு அப்பாலுள்ள தரவைப்பகுதியில் குடியேற்றப்பட்டிருந்தனர்.

எனினும் அண்மைய மழையை அடுத்துஇவ்வாறு குடியமர்த்தப்பபட்ட குடும்பங்கள் மீண்டும் இடம் பெயர்ந்துள்ள துடன் உறவினர்களது வீடுகளில் குடியேறியுள்ளன.


இதனிடையே தமக்கு அரை நிரந்தர குடியிருப்புக்களாகவேணும் அமைத்து வழங்க வேண்டுமென இடம் பெயர்ந்த குடும்பங்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (27)

## ஒருதொகுதி வீடுகள் கையளிப்பு

(வடமராட்சி)

சுனாமி கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களிற்கான வீடமைப்பு உதவித் திட்டத்தின் கீழ் "கியூடெக" தொண்டமைப்பினால் ஒருதொகுதிவீடுகள் வடமராட்சிப் பகுதியில் நிர்மாணித்து வழங்கப்பட்டுள்ளன. வடமராட்சியின் பொலிகண்டி கிழக்குப்பகுதியில் நிறுவப்பட்ட வீட்டுத் தொகுதியொன்று வைபவரீதியாக கடந்த ஐந்தாம் திகதி பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

பொலிகண்டி கிழக்கு கடற்றொழிலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்ற இந்நிகழ்வில் "கியூடெக்" தொண்டமைப்பின் இயக்குநர் வணபிதா சு.ஜெயக்குமார் அடிகளார், சுனாமி நிவாரண விசேட செயலணிக்குகுழுவின் பணிப்பாளர் சு.பாலையா "லீட்ஸ்" தொண்டமைப்பின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (27)



# செல்லும் களம் எங்கும் வெல்லும் படையணி

**இன்று சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் 14 ஆம் ஆண்டு நிறைவையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

க.மிரேசு

வரலாறு என்பது மனிதனுக்கு அப்பாற்பட்ட ஒரு தெய்வீக சக்தியுமன்று. அது மனிதனின் தலைவிதியை நிர்ணயித்துவிடும் சூத்திரப் பொருளுமன்று. வரலாறு என்பது மனித செயற்பாட்டுச் சக்தியின் ஒரு வெளிப்பாடு. மனிதனே வரலாற்றைப் படைக்கின்றான். மனிதனே தனது தலைவிதியை நிர்ணயிக்கின்றான். என்ற இந்த வரலாற்று வரிகள் தமிழீழத்தேசியத்தலைவர் அவர்களால் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியால் வெளியிடப்பட்ட "சுதந்திர விடுதலைப்போரின் கள வரலாறான நெருப்பாற்று நீச்ச லில் 10ஆண்டுகள்" என்ற நூலுக்குவழங்கப்பட்ட ஆசிச்செய்தியில் உள்ளடக்கப்பட்ட முதல்வரிகளாகும். இந்த முதன்மையான வரிகளிலே ஒரு வரலாற்றின் உயிரோட்டத்தை நிதர்சனமாக எடுத்துக்கூறி, வரலாற்றில் மனித செயற்பாட்டு சக்தியினை எடுத்துக்காட்டுகிறார். இதன் அடிப்படையிலே பார்த்தால் வரலாற்றை கருக்கொள்ளவைக்கும் அந்த மனித செயற்பாட்டாளர்கள் யார்? என்பதற்கு விடை காண வேண்டி இருக்கின்றது.

சாதாரண ஒரு மனித வாழ்வியலுக்கு அப்பாற்பட்ட மனித செயற்பாடுகளை விஞ்சுகின்ற ஒருவனாலேயே வரலாறு படைக்கப்படுகிறது. அப்படிச் செய்யப்படுகின்ற வரலாற்று வடிவம் வீரம், விவேகம், தியாகம், அர்ப்பணிப்பு எனப் பலவாறாக விரிந்து செல்கிறது. இவை ஒவ்வொன்றிலுமாக ஒரு சில மனிதர்கள் வரலாறு படைக்கிறார்கள். ஆனால் இவை அனைத்தையும் ஒன்றுதிரட்டி எல்லாவற்றிலுமாக ஒருவன் வரலாறு படைக்கிறான், எனில் அதற்கானசொல் உலக அகராதியில் இல்லாவிட்டாலும், தமிழீழ அகராதியில் அதற்கான உயரிய சொல்



மாவீரர் என உச்சரிக்கப்படுகின்றது. இந்த மாவீரர்களே வரலாற்றைப் படைக்கவும், வரலாற்றை மாற்றியமைக்கவும் உலகில் புதுப்பிறவிகளாகப் பிறந்துள்ளார்கள் என்பதை மறுக்கமுடியாது.

இந்த மாவீரர்கள் என்னும் மகத்தான வரலாற்றாளர்களின் வரிசையில் உச்சகட்ட வீரத்தோடும், தியாகத்தோடும் தமிழீழ தாயக விடுதலைக்காய் போராடி உயரிய உயிர்க்கொடை தந்தவன் லெப்.சீலன் (லூக்காஸ் சாள்ஸ் அன்ரனி) ஆகும். இந்த மாவீரனின் பெயரால் தமிழீழ தாயக விடுதலைப்போரின் வளர்ச்சிக்காக உருவாக்கப்பட்ட முதலாவது மரபுவழிப் படையணியே சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி ஆகும். தியாகத்தின் உச்சகட்ட வடிவிலான விடுதலைப்போர் வரலாற்றில் புதிய வரலாறு படைத்த அந்த மாவீரனின் பெயரைத் தாங்கி உருவாக்கப்பட்ட சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி விழுதூன்றி விருட்சமாகி விட்டதன் இரகசிய வரலாறு, வீரமும், தியாகமும், அர்ப்பணிப்பும், உயரிய கொடையுமாகும். தாயக விடுதலைப்போரை முன்னெடுத்து செல்லவென கரந்தடிப்போரினை நடத்திவந்த எமது விடுதலை இயக்கம் மரபுவழிப் போரினைச் செய்யவேண்டிய தேவையினை அடிப்படையாகக் கொண்டு தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் மரபு வழிப்போர் முறையினை அறிமுகம் செய்ய நினைத்தது.

ஒட்டுமொத்த தமிழ்த் தேசியத்தின சுதந்திரத்தைக் கருத்தில் கொண்டு 1991ஆம் ஆண்டு பங்குனித்திங்கள் 25ஆம் நாள் (ஏப்ரல் 10ஆம்நாள்) சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி வரலாற்றில் தடம்பதிக்கத் தொடங்கியது. உலகில் உள்ள பல்லாயிரக் கணக்கான படையணிகளையும்விட வித்தியாசமாகவே இந்தப்படையணியின் அடித்தளம் மிகவலுவாக போடப்பட்டது. உலகிலுள்ள படைத்துறைசார் படையணிகளைவிட தாயக விடுதலைக்காகப் போராடி தமிழ்த் தேசியத்தின் சுதந்திரத்தைப் பெற்றெடுப்பதே தனது இலட்சியம் என்ற அடிப்படை உண்மையுடன் கட்டி எழுப்பப்பட்டது, சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி ஆகும்.

பயிற்சி, தந்திரம், துணிவு, வெற்றி என்ற அடிப்படைக் கோட்பாடுகளுடன் ஆரம்பிக்கப்பட்ட சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி இவற்றையும் கடந்து அளப்பரிய தியாகங்களையும், மயிர்கூச்செறியும் வீரசாதனைகளையும், சொற்களால் சொல்லிவிடமுடியாத அர்ப்பணிப்புக்களையும், எழுத்தில் எழுதிட முடியாத கொடைகளையும் செய்து முடித்தது. படையணியின் வீரம் செறிந்த வரலாறு சாதனைகளினாலே படைக்கப்பட்டது. சாதனையின் ஒத்தசொல் சாள்ஸ் அன்ரனி எனும் அளவிற்குப் படையணியின் வீரம் மேலோங்கிவிட்டது.

படையணியின் இந்தளவு வெற்றிக்கும், புகழுக்கும், சாதனைக்கும் காரணம் படையணியின் நாமத்தைச் சுமந்திருக்கும் லெப்.சீலன் என்னும் மாவீரனின் உயிர்த் துடிப்புள்ள உயரிய வீரமாகும். இவனது நாமத்தின் இரகசியமே சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் வெற்றிகளாகும்.

1991ஆம்ஆண்டு தொடக்கம் 2005ஆம்ஆண்டாகிய இன்றளவும் ஈழத்தின் சுதந்திர நாள்வரை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணிப் போராளிகளுக்கு வீரத்தையும், விவேகத்தையும், தியாகத்தையும், தற்கொடையையும் உயிரோட்டத்தில் உணர்வாக ஏற்றிவிட்டது லெப்.சீலன் எனும் அந்த மகத்தான வீரனின் வரலாற்று வரிகளாகும் "என்னைச் சுட்டுவிட்டு என் துப்பாக்கியை அண்ணையிடம் கொண்டுபோய்க் கொடு" இந்த வரிகளில் எத்தனையோ புனிதம் மிகுந்த கருத்துக்கள் பொதிந்து கிடக்கின்றன. வீரம், அர்ப்பணிப்பு, தற்கொடை, தாயகப்பற்று, தலைவரிடத்திலுள்ள மேலானபாசம் என்பவற்றையும் விட சிறிதளவேனும் மாறிடா இலட்சியப்பிடிப்பு என்பனவற்றின் அடிப்படையை ஒத்ததாக லெப்.சீலனின் நாமம் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணிக்கு வழிகாட்டியாக அமைந்துவிட்டது. எனவேதான் தமிழீழத் தாயகத்தை மீட்டெடுக்க நடந்த அனைத்து களங்களிலும் உறுதியோடு இறுதிவரை அக்கினி பிழம்புகளுக்குள் நின்று நீராடி வெற்றிகளைப் பெற்று தாயக விடுதலையை இலகுவாக்கியது. எனவேதான் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணிக்கு இயலாத ஒன்று இருக்காமல் போய்விட்டது

தேசியத்தலைவரின் எண்ணத்திற்கு வடிவம் கொடுத்து 1991 ஆம் ஆண்டு ஏப்ரல் 10ஆம்திகதி ஆரம்பிக்கப்பட்ட சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி தமிழீழத் தாயகத்தின் சுதந்திரத்திற்காக நடந்த பெரும்பாலான சமர்களில் பங்குபற்றிப பல வெற்றிகளைப் பெற்றது. ஒவ்வொரு களத்திற்குள்ளும் உள்நுழையும்போதும் வெற்றியுடன் திரும்புவோம் என்ற உறுதியுடனேயே களம் சென்று வெற்றியுடனேயே திரும்பிவந்த வரலாறே ஏராளமுண்டு.



05.05.1991 அன்று சிங்கள தேசத்தின் ஆக்கிரமிப்பாளர்கள் ஓமந்தை கொந்தக்காரஞ்குளம், கோழியாக்குளம் ஆகிய இடங்களில் தமது ஆக்கிரமிப்பு யுத்தத்தை வன்னி விக்கிரம-02 என்ற பெயர் நடவடிக்கை ஊடாகப் பெரும் எடுப்பிலான இராணுவ முன்னெடுப்பினூடாக ஆரம்பித்தனர். தாம் நினைத்ததே நடக்கும் என்ற பேராசையுடன் ஆக்கிரமிப்பை ஆரம்பித்த எதிரிக்கு என்ன நடக்கப்போகிறது என்பது தெரியாமலே இருந்தது.

பல்லாயிரம் படைகளுடன் விமானங்கள், உலங்குவானூர்திகள், கவசவாகனங்கள் என தொடர்ந்து ஆட்லறி ஏவுகருவிகள், உந்துகணைகள் என இராணுவ முன்னெடுப்பை எதிரி ஆரம்பிக்க சிறிலங்காவின் வடபிராந்திய இராணுவத்தளபதியாக இருந்த டென்சில் கொப்பேகடுவா தலைமையில் சிங்களப்படைகளின் கெமுனு, கஜபா படையணிகளின் 2 டிவிசன்களுக்கு மேலான படைகள் நகர்வுகளை ஆரம்பித்தன விண்ணைமுட்டியவெடியோசையும், எறிகணை வெடிப்புக்களும் விமானக்குண்டுகளும் எதிரியின் மூர்க்கமான ஆக்கிரமிப்பைப் பறைசாற்றியது எதிரியின் ஆள் ஆயுதப் பலத்தைவிட போராளிகளின் பலம் குறைந்து இருந்தது என்றாலும், மனோபலம் போராளிகளுக்கு உச்சத்தே இருந்தது அதைவிட தலைவரின் வழி நடத்தல் தந்திரோபாயம் மேலாக இருந்தது.

எதிரிமுற்றிலும் எதிர்பாராதளவு மின்னல் வேகத் தாக்குதலை ஆரம்பித்துவிட்ட சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் தாக்குதலால் எதிரிப்படை என்ன நடக்கிறது என்று சிந்திக்கமுன்பே ஓடத்தொடங்கிவிட்டது. வாய்ப்பேச்சில் வீரராக இருந்த சிங்களத் தலைமைகள் வாய்பேசாது மௌனித்து நின்றன. எதிரிக்குப் பாரிய ஆள், ஆயுத சேதம் ஏற்பட, எதிரி பின்வாங்கி ஓடிவிட்டான்.சாள்ஸ்அன்ரனி படையணியின்முதலாவது தாக்குதலில் ஓடத்தொடங்கிய சிங்களப்படைகள் தொடர் ஓட்டத்திலே பங்கேற்கத் தொடங்கின. வன்னிவிக்கிரம -02இல் தோல்வியடையத் தொடங்கிய சிங்களம் இன்றுவரை தோல்வியையே சந்திக்கிறது. சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் முதலாவது தாக்குதலில் அடிவாங்கிய சிங்களப் படைகள் இற்றைவரை சுமார் 82 தாக்குதலுக்குமேல் அடிவாங்கியே ஓய்ந்து போயிருக்கிறது.

ஆனால், அன்றைய முதல் சமரில் தனது தந்திரோபாய யுத்தியினாலும், திறமையான பயிற்சியினாலும், எதையும் வென்றிடும் வீரத்தினாலும், மின்னல் வேகத் தாக்குதலால் வெற்றி கொண்டது போல் இன்றுவரை அதாவது வன்னி விக்கிரம -02 தொடக்கம் பன்னிரெண்டாயிரம் எதிரிப்படைகளோடு 72 மணிநேரம் ஓயாது போரிட்டு வெற்றிகொண்ட தீச்சுவாலை சமர் வரை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி வெற்றிமேல் வெற்றி பெற்று சாதனையின் உச்சத்திற்கு சென்று எதையுமே எதிர்கொள்ளும் சிறப்பு ஆற்றலை பெற்றது.

சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணிக்கேயுரிய வேகமும், வீரமுமே அதன் வெற்றிக்கு உதவிக் கரம் நீட்டியது. சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியில் இணைந்து கொண்ட ஒவ்வொரு போராளியும் தனக்கென சாதனை ஒன்றினை தேர்ந்து எடுத்துக்கொண்டான். ஒவ்வொரு விடுதலைப் போராளியும் ஈழதேசத்தின் விடுதலை உணர்வின் உச்சத்தே சென்றுவிட்டமையினால் தாயக சுதந்திரத்திற்காய் தாம் ஒவ்வொருவரும் உயரிய தியாகம் செய்யவேண்டுமெனத் தன்னகத்தே சபதம் செய்து கொண்டனர். இவர்களின் இந்த உணர்வோடு படையணியில் ஏற்கனவே வீரகாவியமான மாவீரர்களின் அர்ப்பணிப்பும், தியாகமும் உயிரோட்டமாக ஒவ்வொரு களத்திற்குள்ளும் உள்நுழையும் போராளிகள் வீராவேசத்துடன் போர்புரிந்து மயிர்க்கூச்செறியும் வீர சாதனைகளைச் செய்து ஈற்றில் தம்முயிரையே கொடையாகத் தந்து சாதனை படைத்தனர். "என்னை சுட்டுவிட்டு என் ஆயுதத்தைக் கொண்டுபோ" என்ற வார்த்தையின்

(07 ஆம்பக்கம் பார்க்க.)



# தமிழீழத்தில் படகுக்கட்டுமானப்பணி

## கடற்றொழிலை மேம்படுத்தும்

இருபது வருடங்களாகப் போரையும் அழிவையும் சந்தித்த தமிழ் மக்கள் மூன்று ஆண்டுகளாக ஏற்பட்டிருக்கும் சமாதானம் என்கின்ற போர்வையில் நடக்கின்ற நிழல் யுத்தத்திற்கும், மனித நேயமற்ற செயல்களுக்கும், முகம்கொடுத்து இந்தச்சமாதான காலத்தில் தமது இயல்பு வாழ்க்கையையும் யுத்தத்தினால் அழிந்து போன சொத்துக்களையும் படிப்படியாகச்சேர்த்து கட்டியெழுப்பமுயன்று கொண்டிருந்தார்கள். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் கரையோரப்பகுதிகள் முக்கிய இடம் வகிக்கின்றது.

கடற்றொழிலையே நிரந்தரத்தொழிலாகக் கொண்ட இந்த மக்கள் சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்பு யுத்தத்திலும் சரி தற்போதைய கடல் அனர்த்தத்திலும் சரி தொழில்களை இழந்து தவிக்கின்றார்கள். யுத்தமின்றி அமைதியான சூழலில் வாழ்ந்து வந்த மக்களுக்கு.கடந்த 26-12-2004 அன்று ஏற்பட்ட கடல் அனர்த்தம் பெரும் துன்பமாக மாறியது. பல நூற்றுக்கணக்கான உயிர்கள் பலிகொள்ளப்பட்டது. இதைவிடப் பெறுமதி வாய்ந்த சொத்துக்கள் அழிக்கப்பட்டது. வீடுகள்,தொழில் உபகரணங்கள் சொத்துக்கள். போக்குவரத்து உட்கட்டமைப்பு மீன்பிடித்துறைமுகங்கள் என சகல வகையான இழப்புக்களையும் சந்தித்தவர்கள் இந்தக்கரையோர மக்கள், இடப்பெயர்வுகளினாலும் பாரிய மனித இழப்புக்களினாலும் வீடுகள் கடைகள், வர்த்தக நிலையங்கள் போன்றவற்றின் அழிவுகளினாலும் எமது உள்ளூர் பொருளாதாரத்திற்கு ஏற்பட்ட பாரிய தாக்கத்தையும் கருத்தில்கொள்ளும்போது நாம் புதிய சவால்களை எதிர்கொள்ளவேண்டியுள்ளது. நாடு தற்போது பாதிக்கப்பட்ட பகுதிகளை மீளக் கட்டியெழுப்பவேண்டிய சவாலையும் பாதிக்கப்பட்ட மக்களின் நலங்களைக் கவனிக்கவேண்டிய சாவல்களையும் எதிர்கொண்டுள்ளது. மீளக்கட்டியெழுப்புவதற்கு சில காலம் பிடிக்கும். இதற்கு புனர்நிர்மாண தந்திரோபாயங்கள் வளங்களை ஒருங்கிணைக்கும் திறன், சட்டப்பிரச்சினைகள் உட்படப் பலவிடயங்களை எதிர்நோக்கவேண்டியுள்ளது.

எமது பிரதேசத்தில் புனர்நிர்மாணப்பணிகளுக்கான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நவீன உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த வேண்டும். கடல் கோளினால் மிக மோசமான அழிவுகளைச் சந்தித்துள்ளது மீன்பிடித்துறையே. கடற்கோளின் பின்னர் மீன்பிடித்துறை பாரியதொரு வீழ்ச்சி கண்டுள்ளது. இந்த மீன்பிடித்துறையை மீளவும் கட்டியெழுப்ப வேண்டுமாக இருந்தால் தொழில்களையெல்லாம் இழந்து தவிக்கின்ற மீனவக்குடும்பங்களுக்கு மீன்பிடிப் படகுகளையும் ஏனைய மீன்பிடி உபகரணங்களையும் வழங்கி அவர்கள் மீளவும் கடலுக்கு அனுப்பப்படவேண்டும். உணவை வழங்குவதிலும் பார்க்க வாழ்வதற்கான ஒரு தொழிலைப்பெற்றுக்கொடுப்பதுதான் உண்மையான பரிகாரம்.

இதற்கு அமைவாக தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் எம்.எம்.எஸ் (மரையன் மல்ரி சேவிஸ்) நிறுவனம் தமது கிளைகளின் ஊடாக எதிர்கால திட்டத்துடனும், தொழில்நுட்பத்துடன் கூடிய ஒரு சேவை மனப்பான்மையுடனும் செயற்பட்டு வருகின்றது.

அந்த வகையில் 2002ஆம் ஆண்டு சிறிலங்காவின் கடற்றொழில் நீரியல் அமைச்சில் பதிவு செய்யப்பட்ட இந்த நிறுவனம் முல்லைத்தீவில் கடந்த மூன்று ஆண்டுகளாக இயங்கி வந்தது. தற்போது ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தால் கரையோரப் பகுதிகளில் தமது கிளைகளைப் பரப்பி சேவையைத் தொடங்கியுள்ளது. இதன் கிளைகள் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, வடமராட்சி கிழக்கு, கிளிநொச்சி போன்ற பகுதிகளில் செயற்பட்டுவருகின்றன. இந்த படகுக்கட்டுமானத்திற்கான மூலப்பொருட்களைக் கடந்த காலங்களில் சிறிலங்கா அரசு தமிழர் தாயகப்பகுதிகளுக்குக் கொண்டு வருவதை முற்றாகத்தடை செய்திருந்தது. தற்போது ஏற்பட்ட கடல் அனர்த்தத்தால் மட்டுப்படுத்தப்பட்ட மூலப்பொருட்களைக் கொண்டு வருவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. மரையன் மல்ரி சேவிஸ் நிறுவனம் சுனாமியால் அடித்துச்செல்லப்பட்டு உடைந்த படகுகளைத் மீளவும் பாவிக்கும் வகையில் திருத்தி அமைத்து மக்களுக்குத் வழங்கி வருகின்றது. தற்போது மக்களுக்கு தேவையான படகுகளை தயாரிக்க இந்த நிறுவனம் தயாராக இருந்த போதிலும், குறைந்தளவு படகுகளையே தயாரிக்க முடிகின்றது. காரணம் கிடைகின்ற நிதியுதவிகள் குறைவாக இருக்கின்ற படியால் எந்தளவு உதவிகள் கிடைக்கின்றதோ அந்தளவுக்கு படகுகளை உற்பத்தி செய்து மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தயாராகவுள்ளது.

கடந்த மாதம் வடமராட்சி கிழக்கில் படகுக்கட்டுமான நிலையத்தில் புதிய படகுகளும், கடற்கோளினால் சேதமுற்ற நிலையில் திருத்தியமைக்கப்பட்ட படகுகளும் மீனவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. மேலும் பெண்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு பெண்களால் புதிதாக உருவாக்கப்பட்ட படகுகளும், திருத்தியமைக் கப்பட்ட படகுகளுமே மீனவர் களிடம் கையளிக்கப்பட்டன.

வேலை வாய்ப்பற்றிருந்த வடமராட்சி கிழக்கைச்சேர்ந்த பெண்கள் இந்தப்படகுக்கட்டுமான நிலையத்தில் தொழில் வாய்ப்பைப்பெற்றுள்ளனர்.

இவர்களுக்கு படகுக்கட்டுமான அடிப்படைப்பயிற்சிகள் வழங்கி ஊக்குவிப்புப் பணம் வழங்கி சிறந்த தொழிற்பயிற்சி வல்லுனர்களாக இந்த நிறுவனம் மாற்றி வருகின்றது.



சிறியபடகுகளுடன் நின்றுவிடாது இந்தப் பயிற்சியாளர்களைக் கொண்டே ஆழ்கடலில் தங்கி நின்று தொழில் செய்யக்கூடிய இழுவைப்படகு களையும் நவீன இயந்திரப் படகுகளையும் தயாரிப்பதற்கான திட்டத்தையும் இது கொண்டுள்ளது. இங்கு உருவாக்கப் படுகின்ற படகுகள்,தொழில் நுட்ப மானதும் தரமானதுமாக உருவாக்கப்படுகின்றதென இப்படகுகளைப்பாவிக்கும் தொழிலாளர்களினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

தூரநோக்கு சிந்தனையுடனும், எதிர்காலத் தேவை கருதியும் உருவாக்கப்பட்டதுவே இந்தப் படகுக்கட்டுமானப்பணி. இலாப நோக்கமின்றிச் செயற்பட்டு வரும் எம்.எம்.எஸ் நிறுவனம் தொடர்ந்தும் தமிழர் தாயகப் பிரதேசங்களில் சேவை செய்வது வரவேற்கப்படவேண்டியது.

**-வீ.பிரதீபன்-**





---

## செல்லும் களம்......

மையத்தில் இருந்து எத்தனையோ வீரசாதனைகள் பிறப்பெடுக்கத்தொடங்கியது.

❖கொடிய இராணுவ முட்கம்பி வேலியில் படுத்து எனக்கு மேலால் ஏறி ஓடுங்கோ என்றான் ஒரு வீரன்

❖ என்னைப்பார்க்காமல் ஷெல்லை எனக்கு மேலால் அடியுங்கோ என்றான் ஒருவீரன்

❖ நான் போறன் பொறி வெடித்ததும் அதற்குப்பின்னால் வாருங்கள் என்றான் ஒரு வீரன்

❖எதிரியின் இயந்திரத்துப்பாக்கி சடசடக்க நான் நேரே செல்கிறேன் நீங்கள் பக்கவாட்டாக நகருங்கள் என்றான் ஒருவீரன்

❖ எதிரியின் துப்பாக்கி சுட்டுக்கொண்டிருக்க தணல்போல் பழுத்திருந்த அவனது துப்பாக்கி குழலைப்பிடித்து இழுத்து சூட்டை நிறுத்தி ஓடுங்கடா உள்ளே என்றான் ஒருவீரன்

இப்படியாக இன்னும் எத்தனையோ வீர சாதனைகளும், தியாகங்களும், அர்ப்பணிப்புக்களும் படையணியின் உயிரோட்டத்தில் கலந்திருந்தமையினாலேயே எந்தக்களம் சென்றாலும் வெற்றி அல்லது வீரச்சாவு என்ற கோட்பாட்டில் எதையும் வென்று இயலாது ஒன்று இருக்காது எமக்கு என்ற தாரக மந்திரத்திற்கு அமைய வெற்றியோடு நிமிர்ந்து நிற்கிறது.

எம்தேசத்தின் தலைவன் என்ன சொல்கிறானோ அதற்கு வேக முடனும், விவேகமுடனும் செயல் வடிவம் கொடுத்து எதிர்கொள்ளப் போவது எரிமலை என்றாலும், சிறிதும் கலங்கிடாத மனவுறுதியுடன் களம் விரைந்து இரவு, பகல் பாராது களமாடி பசி, தாகம், நித்திரையை மறந்து மழை,பனி, வெய்யிலில் தோய்ந்து தனது கடமையைச் செய்துமுடித்து வெற்றிபெறும் அபாரசக்தி சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் சிறப்பு அம்சமாகும்.

தமிழீழத் தாயகத்தில் நடந்த பெரும்பாலான சமர்களில் பங்கேற்று குருதிதோய்ந்த களத்தில் செங்களம் ஆடி வீரமுடன் போர் புரிந்து,1058 மாவீரர்களின் சாதனைகளும், வீரம்செறிந்த சண்டைகளினதும், தியாகங்களினதும், கொடைகளினதும் பெறுமதியும் சொற்களால் சொல்ல முடியாதவை, இவைகளை அறிந்து கொள்ளவேண்டுமாயின் சிங்கள எதிரியிடமே கேட்டுப் பார்ப்பது நல்லது. சிங்கள எதிரிக்கே இந்த வீரர்களின் செயல் நன்றாகத் தெரிந்திருக்க வாய்ப்பு உண்டு. ஏனெனில் இந்த மகத்தான மாவீரர்களின் செயலை நேரே நின்று அனுபவித்தவன் எதிரியே ஆவான்.

கரந்தடிப்படையாக இருந்த எமது விடுதலைப்போராட்டம் மரபு வழிப்படையணியாக சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி உருவாகிய நாள் முதல் தாயக விடுதலைப் போராட்டம் தளர்வில்லா உறுதிகொண்ட புதிய மூச்சாய் எழுந்து நிற்கின்றது என்றால் மிகையாகாது சொன்னதைச் சொன்னபடியே சொல்லிய இடத்தில் சொல்லியநேரத்தில் செய்து முடிக்கும் திறன் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியிடம் இருந்தமையினாலேயே செல்லும் களம் எங்கும் வெல்லும் படையணியாகி ஈழப்போராட்டத்திற்கு மிகையானதோர் உந்துசக்தியாக திகழ்கிறது.

# முத்துப்பிள்ளையார் வண்ணச் சோலையின்



## மாபெரும் சிறப்புத் தள்ளுபடி

அன்பான வாடிக்கையாளர்களுக்கு!
சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு
மெது வாணிபத்தில் கொள்வனவு செய்யப்படும் பெரியவர்கள் குழந்தைகளுக்கான
அனைத்து தைத்த புடைவை வகைகளுக்கும், சாறி வகைகளுக்கும்
10% சிறப்புத் தள்ளுபடி வழங்கப்படும் என்பதை
வாடிக்கையாளர்களுக்கு தெரிவித்துக் கொள்வதோடு
இச் சிறப்புத் தள்ளுபடி 14.04.2005 அன்று சித்திரைப்
புத்தாண்டுடன் முடிவடையும் என்பதையும்
தெரிவித்துக் கொள்கின்றோம்.





## முத்துப்பிள்ளையார் வண்ணச் சோலை

யாழ்சாலை-கிளிநொச்சி. யோகபுரம் - மல்லாவி.

(சி-11496)


# 45ஆம் நாள்நினைவஞ்சலி



அலைக் கரங்கள் அரவணைத்து
புடமிட்ட புலி-இவன்
புதுப்பரணி பாட புறப்பட்ட வேங்கை
கடற்பயணங்களின் நாயகனாய்
கடற்புலிகளின் காப்பரனாய்
கடற்படையின் நிதிப்பொறுப்பை
கடமையாய் ஏற்று கனிவான
நடத்தையால் பலர் மனம் வென்றவன்
இவன் தாயகக் கனவினை நனவாக்கும்

கடற் புலிகளின்
நிதிப்பொறுப்பாளர்

## மேஜர் தயானந்தன்

[சின்னராசா தங்கவடிவேல்]
மாணாங் கணை வல்வெட்டித்துறை

பிறப்பு
28-07-1976

வீரச்சாவு
25-02-2005

போராளிகள், பணியாளர்கள்,
கடற்புலிகள்.

(5973)

# அச்சுறுத்தலின் மத்தியில் இந்.பாக்-பேருந்துப் பணி

இந்திய கட்டுப்பாட்டுப் பகுதியான காஷ்மீருக்கும் பாகிஸ்தான் பகுதியான முஸபராத்துக்கும் இடையிலான பேருந்துப் போக்குவரவுப் பணி கடந்த வியாழன் தொடக்கி வைக்கப்பட்டது.இந்திய பிரதமர் மன்மோகன் சிங் கொடியசைத்துத் தொடக்க 19 பயணிகளைக் கொண்ட பேருந்து முஸாபராபாத்நோக்கி புறப்பட்டதைப் பார்த்து மக்கள் மகிழ்ச்சி பொங்க ஆடிப்பாடினர் என இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்த 57 வருடங்களாக இடம்பெறாதிருந்த இப் பேருந்து சேவை தீவிரவாதிகளின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் இடம்பெற்றிருக்கிறது.

# ஏழு ஆண்டுகள் சிறைத்தண்டனை

பலகோடி ரூபா போலி முத்திரைகள் மோசடி வழககுத் தொடர்பாக பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் நேற்று முன்தினம் மூன்று பேருக்கு ஏழு ஆண்டு சிறைத்தண்டனை விதித்துள்ளது. எஸ். கிருஷ்ணமூர்த்தி, பி.மாரிமுத்து ஜி.ராஜா என்ற இந்த மூன்றுபேரும் கர்நாடக மாநிலத்துக்குள் ரூபா.56 லட்சம் மதிப்புள்ள போலி முத்திரைத்தாளை விநியோகித்தவர்கள் ஆவார்கள். இதில் எஸ்.கிருஷ்ணமூர்த்தி என்பவரிடம் இருந்து ரூபா பத்து லட்சம் மதிப்புள்ள ஐந்தாயிரம் ரூபாய்க்கான போலி முத்திரைத் தாள்கள் பிடிபட்டன. நீதிமன்றம் இவர்களுக்கு ஏழு ஆண்டு கடுங்காவல் சிறைத்தண்டனை மற்றும் ரூபா.50 ஆயிரம் அபராதம் விதித்துத் தீர்ப்பளித்துள்ளது. கட்டத்தவறினால் மேலும் இரண்டு ஆண்டு சிறையில் இருக்க வேண்டும் என்று நீதிமன்றம் கூறியுள்ளது. போலி முத்திரைத்தாள் மோசடி வழக்குகளில் நீதிமன்றம் அளிக்கும் முதல் தீர்ப்பு இது என்பதால், இந்தத் தீர்ப்பு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.


# இளம் கலைஞர்களுக்கு ஒரு நல்ல செய்தி

## முல்லை நுண்கலைக் கல்லூரியின் "இளையோர் ஆற்றுகைத்திறன் ஊக்குவிப்புப் பிரிவு" உருவாக்கம்

முல்லை மாவட்ட நுண்கலைக்கல்லூரியின் ஒரு புதிய செயற்பாடாக இப்பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. இப் பிரிவின் ஊடாக முல்லை.மாவட்டதிலுள்ள அனைத்துப் பாடசாலை மாணவர்களும் தமது கலைகளில் ஆற்றுகைத்திறனை விருத்தி செய்ய முடியும்.

அன்பான மாணவர்களே!

நீங்கள் கவிதை எழுதுபவரா? இசையில் நாட்டமுள்ளவரா? தாளவாத்தியங்களில் விருப்பமுள்ளவரா? நடனத்தில் ஈடுபாடுள்ளவரா? ஓவியம் வரையும் விருப்பமுள்ளவரா? நாடகக்கலையில் விருப்பமுடையவரா? பாரம்பரிய கலைஞராக வரத் துடிப்பவரா? ஏதேனும் ஒரு கலைத்துறையில் சாதிக்கத் துடிக்கின்றீர்களா?

உடனே,

உங்கள் முழுப்பெயர், முகவரி, பாடசாலையின் பெயர், பிறந்ததிகதி, விருப்பமான கலைத்துறை, படிக்கும் வகுப்பு, தற்போதைய கலைமுயற்சி என்பவற்றை உள்ளடக்கிய தரவுகளைக் குறித்த விண்ணப்பத்தினை எழுதி இந்தப்பிரிவின் அங்கத்தவராகுங்கள்.

நாங்கள் காத்திருக்கிறோம். உங்கள் வளர்ச்சிக்கு ஊக்கமளிப்பதற்கு,

தயாரித்த விண்ணப்பப் படிவத்தைக் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

தலைவர்,<br>
"இளையோர் ஆற்றுகைத்திறன் ஊக்குவிப்புப் பிரிவு",<br>
முல்லை மாவட்ட நுண்கலைக்கல்லூரி,<br>
முள்ளியவளை,<br>
அல்லது<br>
புதுக்குடியிருப்பு.

(சி.11629)

# தமிழீழ தேசிய தொலைக்காட்சிக்கான ஆளணி வேண்டுகைகள்

தமிழீழ தேசிய தொலைக்காட்சி சேவையில் பணிபுரிவதற்கான வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

* செய்திவாசிப்பாளர்
* நிகழ்ச்சி அறிவிப்பாளர்
* நிகழ்ச்சித் தயாரிப்பாளர்
* நிகழ்ச்சித் தொகுப்பாளர்

ஆண்,பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் தகைமைகளுக்கு அமைய கொடுப்பனவு வழுங்கப்படும் .

விண்ணப்பங்களை:<br>
"நிதர்சனம்"<br>
திருநகர் வீதி,<br>
கிளிநொச்சி.<br>
என்ற முகவரிக்கு 15.04.2005<br>
இற்கு முன் அனுப்பி வைக்கவும்

பணிப்பாளர், தமிழீழ தேசிய தொலைக்காட்சி.

(சி.11661)

# 5 ஆம் ஆண்டு நினைவலைகள்



தணியாது போராடும்<br>
தலைவனின் பாதையில்<br>
தமிழீழம் நோக்கிய<br>
தளராத நடையிலே<br>
தளராத உறுதியில் நீ<br>
வரலாறாய் ஆனாலும்<br>
ஆண்டுகள் ஐந்தென்ன<br>
என்றுமே அழியாது<br>
உன் நினைவு.

இந்நாளில் வீரகாவியமான அனைத்து மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம்

இன்று எமது இல்லத்தில் நடைபெறும் நினைவஞ்சலி நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு சகபோராளிகள், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கவிஒளி பந்தல் சேவை,<br>
மின்வாரிய ஒழுங்கை,<br>
மல்லாவி.

கப்டன் மணியிழையின்,<br>
குடும்பத்தினர்,

(சி.11654)

கப்டன் மணியிழை/அருள்விழி | சோதியா படையணி | கவிதா செல்வநாயகம் வேலணை-யாழ். | மழலையாய்:-01.06.1979 மாவீரராய்:-10.04.2000

## மூன்றாவது ஒரு நாள் போட்டி

# நவீட் உல் ஹசன் அபாரப் பந்துவீச்சு பாகிஸ்தான் அணிக்கு முதல் வெற்றி




இந்திய-பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் ஜம்ஷெட்பூரில் நேற்று நடைபெற்ற மூன்றாவது ஒரு நாள் போட்டியில் 106 ஓட்டங்களால் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணித் தலைவர் இன்சமாம் தமது அணி முதலில் துடுப்பெடுத்தாடும் என்று அறிவித்தார்.

இதன்படி முதலில் துடுப்பாடிய பாகிஸ்தான் முன்னணி வீரர்களின் அதிரடி ஆட்டத்தின் துணையுடன் நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் ஒன்பது விக் கெட்டுக்களை இழந்து 319 ஓட்டங்களைக் குவித்தது.

துடுப்பாட்டத்தில் சல்மான்பட் சதமடித்தார். அவர் 116 பந்துகளை சந்தித்து 101 ஓட்டங்களைக் குவித்தார். இவரைவிட மாலிக் 75, யுஹானா 43, இன்சமாம் 23, ரசாக் 18, அப்ரிடி 17 முறையே ஓட்டங்களைக் குவித்தனர்.



பந்து வீச்சில் நெஹ்ரா மூன்று விக்கெட்டுக்களையும், சஹீர்ஹான், ஹர்பஜன்சிங், சேவாக், யுவராஜ்சிங் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். இந்தியாவின் நம்பிக்கைக்குரிய பந்து வீச்சாளர் இர்பான் பதான் 8.2 ஓவர்கள் பந்து வீசி 67 ஓட்டங்களைவிட்டுக் கொடுத்து விக்கெட் எதனையும் கைப்பற்றாதது குறிப்பிடத்தக்கது.

பதிலுக்கு பாரிய வெற்றி இலக்கை நோக்கி ஆட்டத்தை ஆரம்பித்த இந்திய அணிக்கு நவீட் உல் ஹசன், சமி ஆகியோர் சவாலாக அமைந்தனர்.

அவர்கள் இருவரும் இந்திய துடுப்பாட்ட வரிசையை துவம்சம் செய்தனர். இதனால் இந்திய அணி 82 ஓட்டங்களுக்கு ஆறு விக்கெட்டுக்களை இழந்து இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டது.




இதன் பின்னர் [illegible] ஆடிய முகமட் ஹைப் பதான் ஜோடி சற்று நிலைத்து நின்று ஆடியது. பின்னர் ஹைப்பும் களத்தைவிட்டு வெளியேறினார். பதான் சஹீர்ஹான் ஜோடி அதிரடியாக ஓட்டங்களைக் குவித்தது. இருப்பினும் 41.3 ஓவரில் இந்தியா 213 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் ஆகக் கூடுதலாக பதான் 64 ஓட்டங் களைக் குவித்தார். இவரைவிட ஹைப் 32, ராவிட் 28, டோனி 28 ஓட்டங்களை முறையே பெற்றனர்.



பந்து வீச்சில் நவீட் உல்ஹசன் 8.4 ஓவர்கள் பந்து வீசி 27 ஓட்டங்களைக் கொடுத்து ஆறு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். சமி இரண்டு விக்கெட்டுக்களையும், கனேரியா, மலிக் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக நவீட்உல்ஹசன் தெரிவானார். ஆறு போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் இந்திய அணி 2-1 என்ற நிலையில் முன்னணியில் உள்ளது.

## இந்திய-பாக். வீரர்கள் விமானத்தில் திரும்ப ஏற்பாடு

இன்சமாம் மீதான கல்வீச்சு சம்பவத்தை தொடர்ந்து இரு அணி வீரர்களும் ஜாம்ஷெட் பூரிலிருந்து ராஞ்சி திரும்ப தனி விமானம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மூன்றாவது ஒருநாள் போட்டிக்காக இரு அணி வீரர்களும் ராஞ்சியிலிருந்து ஜாம்ஷெட்பூர் வர பேருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பாகிஸ்தான் வீரர்கள் அமர்ந்திருந்த பேருந்து ராஞ்சி விமான நிலையத்திலிருந்து வெளியே வந்த போது மர்ம நபர் ஒருவர் கல் வீசியுள்ளார். இது, அணித்தலைவர் இன்சமாம் அமர்ந்திருந்த இருக்கைக்கு அருகிலிருந்த கண்ணாடியை உடைத்துக்கொண்டு உள்ளே வந்து விழுந்தது. இச்சம்பவத்தில் இன்சமாமுக்கு காயம் ஏதும் ஏற்படவில்லை. ஆனாலும் பாதுகாப்பு கெடுபிடியாக்கப்பட்டுள்ளது.

இது ஒரு வருந்தத்தக்க சம்பவம். பாகிஸ்தான் அணி நிர்வாகம் இது குறித்து புகார் ஏதும் தெரிவிக்கவில்லை. இம்மாதிரியான சம்பவங்களை தவிர்க்க, ஜாம்ஷெட்பூரிலிருந்து ராஞ்சிக்குத் திரும்ப வீரர்களுக்கு தனி விமானம் ஒன்றை ஏற்பாடு செய்யவுள்ளோம். இதற்கான முயற்சிகள் தற்போது நடந்து வருகின்றன என இந்திய கிரிக்கெட் சபை செயலாளர் எஸ்.கே. நாயர் கூறியுள்ளார்.




## புற்று நோயாளர்களுக்கு பாக் அணி ஒரு இலட்சம் உதவி

பாகிஸ்தான் கிரிக்கெட் அணிவீரர்கள் ஜாம்ஷெட்பூரில் உள்ள மெகர்பாய், டாடா நினைவு ஆஸ்பத்திரிக்குச் சென்றனர். அங்கு அவர்கள் புற்று நோயாளர்களை சந்தித்து அவர்களிடம் பேசினார்கள். அத்தோடு பாகிஸ்தான் அணி சார்பில் புற்று நோயாளர்களுக்கு ரூ.1.20 இலட்சம் வழங்கப்பட்டது. அப்ரிடி தனியாக ரூ 20 ஆயிரம் வழங்கினார்.




யாழ். பல்கலைக்கழகம், யாழ். பாடும்மீன் விளையாட்டுக்கழகத்திற்கு இடையேயான போட்டியில் ஒரு கட்டத்தைப் படத்தில் காணலாம். (41)

## அரையிறுதியில் யாழ். பல்கலை அணி

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும், சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ். மாவட்டப் பிரிவின் ஆதரவுடன் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றுவரும் உதைபந்தாட்டப் போட்டியின் கடந்த வியாழனன்று காலிறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டுக்கழகமும் இளவாலை யங்கென்றீஸ் விளையாட்டுக்கழகமும் வெற்றி பெற்றுள்ளன. யாழ் லீக்கைச் சேர்ந்த பாடும் மீன் விளையாட்டுக்கழகத்திற்கும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கும் இடையே இடம்பெற்ற போட்டி கோல்கள் எதனையும் பெறாத நிலையில் முடிவுற்றது.

வெற்றி தோல்வியை தீர்மானிக்க வழங்கப்பட்ட சமநிலை உடைப்பு உதையில் யாழ். பல்கலைக்கழகம் 4-2 என்ற கோல் கணக்கில் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தை வெற்றி கொண்டது.

மற்றுமொரு ஆட்டத்தில் முல்லை மாவட்டத்தைச் சேர்ந்த முல்லை விளையாட்டுக்கழகமும் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த இளவாலை யங்கென்றீஸ் விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டதில் யங்கென்றீஸ் விளையாட்டுக்கழகம் 1-0 என்ற கோல் கணக்கில் முல்லை விளையாட்டுக்கழகத்தை வெற்றி கொண்டது.

(41)

## தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட்



## லாறா அபாரம்; முதல் நாளில் 281 ஓட்டம் குவிப்பு



மேற்கீந்தியத்தீவு - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் போர்ட்ஸ் பெயினில் நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடும் மேற்கிந்தியத்தீவுகள் அணி முதல் நாள் ஆட்டநேர முடிவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 281 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் துடுப்பாடுவதாக அறிவித்தது. இதில் விளம்பர ஒப்பந்தப் பிரச்சினை காரணமாக முதல் டெஸ்ட் போட்டியில் விளையாடாத லாறா அபாரமாக ஆடி ஆட்டமிழக்காது 159 ஓட்டங்களைக் குவித்தார்.

ஏனைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர்.

பந்து வீச்சில் நிற்றினி நான்கு விக்கெட்டுக்களையும், நெல், போஜே தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

லாறா 41 ஓட்டங்கள் பெற்றிருந்தபோது டெஸ்ட் போட்டியில் அதிக ஓட்டங்கள் குவித்த மூன்றாவது இடத்திலிருந்த டெண்டுல்கரைக் கடந்தார். டெண்டுல்கர் 10,134 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். லாறா 10,252 ஓட்டங்கள். இதுவரை எடுத்து மூன்றாவது இடத்திற்கு முன்னேறினார்.

## காளி கோயிலில் கனேரியா பிரார்த்தனை

இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் தொடரில் இனிமேலான ஆட்டங்களில் வெற்றி பெறுவதற்காக ஜாம்ஷெட்பூரில் உள்ள காளி கோயிலில் பிரார்த்தனை மேற்கொண்டார் பாகிஸ்தான் அணியின் சுழற்பந்து வீச்சாளர் டேனிஷ் கனேரியா.

பாகிஸ்தான் அணியிலுள்ள ஒரே இந்து மதத்தவர் கனேரியா. அவர் வியாழக்கிழமை பாதுகாப்பு படை சூழ தனியாக காளி கோயில் சென்று அணியின் வெற்றிக்காகப் பிரார்த்தனை செய்தார்.

கோயிலில் உள்ள ஒவ்வொரு பிரகாரத்துக்கும் சென்று பிரார்த்தனை மேற்கொண்டார். அப்போது பெரும்பாலும் கையைக் கூப்பியவாறே சென்றார்.

கொல்கத்தாவில் இரண்டாவது டெஸ்ட் போட்டி நடைபெற்ற போது அங்குள்ள காலிகாட்டில் புகழ் பெற்ற காளி கோயிலுக்குச் சென்று கனேரியா பிரார்த்தனை மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது.

கொச்சி, விசாகப்பட்டினம் ஆகிய இடங்களில் நடைபெற்ற ஒருநாள் ஆட்டங்களில் அணியில் இடம் பெறாமல் போன கனேரியா ஜாம்ஷெட்பூரில் நடைபெற்ற மூன்றாவது போட்டியில் விளையாடினார்.

### மகளிர் உலகக் கிண்ணம்

## காயம் குணமடையா விட்டாலும் இறுதிப்போட்டியில் ஆடுவேன்

WOMEN'S CRICKET WORLD CUP 2005 SOUTH AFRICA

**இந்திய அணித் தலைவர்**

தென்னாபிரிக்காவில் நடந்து வரும் உலக கோப்பை மகளிர் கிரிக்கெட் போட்டியில் அரை இறுதியில் இந்திய அணி 40 ஓட்ட வித்தியாசத்தில் நியூசிலாந்தை வீழ்த்தி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.


இன்று நடைபெறும் இறுதிப் போட்டியில் இந்தியா-அவுஸ்திரேலியா அணிகள் மோதுகின்றன. அரை இறுதியில் காயம் அடைந்த இந்திய அணித் தலைவர் மிதாலிராஜ் காயம் குணமடையாவிட்டாலும் இறுதிப் போட்டியில் ஆடுவேன் என்று கூறினார். உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் ஆட வேண்டும் என்ற கனவு நனவாகி இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



### சம்பியன்

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி மாணவன் செல்வன் குகதாசன் கோபிநாத் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் உயரம், 200 மீ. ஓட்டம், முப்பாய்ச்சல் ஆகிய போட்டியில் முதல் இடங்களைப் பெற்றுக் கொண்டார்.

## சிந்தனைக்கு



கலாசாரம் உயர்நிலை பெறுவதாயின்,
கலாசார மறுமலர்ச்சி அவசியம்;
கலாசாரப் புரட்சி அவசியம்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 10-04-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## மறைமுகப் போர் விஸ்தரிப்பு!

"திருகோணமலையில் அமைதியைச் சீர்குலைக்க சிறிலங்கா இராணுவம் திட்டமிட்டுச்செயற்படுகின்றது. இது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்'' என்ற திருமலை மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் எழிலன் அவர்களின் எச்சரிக்கை யானது ஒரு தீர்க்கமான எதிர்வு கூறலாகவும் கொள்ளத்தக்கது.

திருமலை மாவட்டத்தின் மூதூர்ப்பிரதேசத்தில் பூநகர்ப் பகுதியில் விடுதலைப் புலிகளின் சோதனைச்சாவடி மீது நேற்று முன்தினம் அதிகாலை நடத்தப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்தே இவ் எச்சரிக்கையுடன் கூடியதான எதிர்வு கூறுதல் எழிலனால் விடுக்கப்பட்டுள்ளது. இது கருத்திற் கொள்ளப்படாத பட்சத்தில் யுத்த நிறுத்த உடன்பாடு மேலும் பலவீனமடைவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

பூநகர்ப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலில் சோதனைச்சாவடியில் இருந்த பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டதோடு, துணைப்படை வீரர் ஒருவர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளமை, யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் திருமலையில் நடந்த மோசமான சம்பவமாக இதனைக்கொள்ள வைத்துள்ளது. அதாவது ஏற்கனவே இப்பூநகர் சோதனைச்சாவடியில் மூன்று வாரங்களிற்கு முன்னரும் தாக்குதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றபோதும் சேதம் ஏற்படவில்லை. ஆகையினால் அது முக்கியத்துவம் பெற்றதாக அமையவில்லை.

பூநகர் சோதனைச்சாவடி மீது தாக்குதல் இடம்பெறலாம் என்பதற்கான சமிக்ஞைகள் ஏற்கனவே வெளிப்பட்டே இருந்தன. இதனை இச்சோதனைச்சாவடிக்கு ஐந்நூறுமீற்றர் தொலைவிலுள்ள மகிந்தபுர இராணுவமுகாமில் தமிழ் ஆயுதக்குழு ஒன்றைச் சார்ந்த சிலர் தங்கியிருப்பதாக விடுதலைப்புலிகள் முறைப்பாடு செய்தமையே வெளிக்காட்டுவதாய் உள்ளது.

விடுதலைப் புலிகளின் இம்முறைப்பாடு வழமைபோலவே, சிறிலங்காப்படைத்தரப்பில் நிராகரிக்கப்பட்டது. ஆனால் புலிகளின் முறைப்பாடு நிராகரிக்கப்பட்ட அடுத்தநாளே இத்தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் இத்தாக்குதல் குறித்து ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை. அத்தோடு இத்தாக்குதல் நடத்தியவர்கள் யார்? என்பது குறித்து ஆராய்வதற்கும் எதுவுமில்லை.

ஆனால் மூன்றாண்டு கால யுத்தநிறுத்த காலத்தில் இதனைவிட பல மோசமான சம்பவங்கள் இடம்பெற்றதுண்டு. விடுதலைப் புலிகளும், தமிழ் மக்கள் பலரும் சிறிலங்கா இராணுவத்தினராலும் அவர்களின் ஏவலர்களாக இயங்கும் ஆயுதக்குழுக்களினாலும் கொல்லப்பட்டுள்ளனர். ஆகையினால், பூநகர் சம்பவத்தின் முக்கியத்துவமும் சிலவேளைகளில் குறைவாக மதிப்பிடப்படலாம்.

ஆனால், அத்தகையதொரு மதிப்பீடு செய்யப்படுமானால் இச்சம்பவத்தின் பாரதூரம் புரியப்படவில்லை என்பதே அர்த்தமாகும். ஏனெனில் இச்சம்பவம் மட்டு-அம்பாறை மாவட்டங்களில் இருந்து திருமலை மாவட்டத்திற்கும் ஆயுதக்குழுக்களின் நடவடிக்கை என்ற பெயரில் வன்முறைகளை விஸ்தரிக்க சிறிலங்கா ஆயுதப்படையினர் மேற்கொண்ட முயற்சியாகவே கொள்ளப்படத்தக்கதாகும். அதாவது மட்டு-அம்பாறை மாவட்டங்களைப் போன்று திருமலையிலும் பதற்றத்தையும் அமைதியின்மையையும் தோற்றுவிக்க அரசாங்கம் அக்கறை கொண்டுள்ளது எனலாம். இதேசமயம் இம் மறைமுகப்போரை திருமலை வரையில் மட்டுல்ல அதற்கு வெளியேயும் சிறிலங்கா அரசு விரிவாக்கம் செய்யமுற்பட்டுள்ளதையே வவுனியாவின் தற்போதைய சூழ் நிலையும் வெளிகாட்டுவது போல் உள்ளது.

சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பு மறைமுக யுத்தத்தை விரிவாக்கம் செய்துள்ளமையானது நிச்சயமாக சமாதான முயற்சிகளிற்கு அனுசரணையானதாக அமையமாட்டாது. சிறிலங்கா ஆயுதப் படைத்தரப்பு இச்சம்பவங்களுக்கும் தமக்கும் தொடர்பு இல்லை எனக் கூறலாம். கண்காணிப்புக்குழுவும் தாக்குதல் நடாத்தியவர்கள் யார்? என அடையாளம் காணப்படவில்லை என அறிக்கை வெளியிடலாம்.

ஆனால் ஒன்று சிறிலங்கா அரசும் சரி, கண்காணிப் புக்குழுவினரும் சரி, தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளவர்கள் யுத்தநிறுத்த உடன்பாட்டில் கையொப்பமிட்ட ஒரு தரப்பினர் என்பதை கருத்திற்கொள்ளுதல் வேண்டும். அத்தோடு புலிகளுக்கு எதிரான மறைமுகப்போரானது யுத்தநிறுத்த மீறலாகக் கொள்ளத்தக்கதல்ல என்ற முடிவானது யுத்தநிறுத்த உடன்பாடு நிலைத்து நிற்பதற்கும் அமைதி நீடிப்பதற்கும் உதவமாட்டாது என்பதையும் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

விடுதலைப்புலிகளின் திருமலைமாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன், இத்தாக்குதலானது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் எனச்சுட்டிக்காட்டியதில் இருந்தே இதனை புரிந்து கொள்ள முடியும். அதாவது அரசு மறை முகயுத்தத்தை விரிவாக்கம் செய்வது யுத்தநிறுத்தம் நீடிக்கவும், சமாதானம் நிலைக்கவும் உதவப்போவதில்லை. பதற்றத்தையும், வன்முறையையும் அதிகரிப்பதாகவே இருக்கும்.

-பேச்சுக்களை உடன் ஆரம்பிக்க அரசை வலியுறுத்தி-

# வவு. இல் நடைபெறும் பேரணியில் பங்கேற்க வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் அழைப்பு

(வவுனியா செய்தியாளர்)

நிரந்தர சமாதானத்திற்காக விடுதலைப்புலிகளுடன் உடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டுமென அரசாங்கத்தை வலியுறுத்தி வவுனியாவில் நாளை நடைபெறவுள்ள எழுச்சிப் பேரணியில் அனைவரையும் அணிதிரளுமாறு வவுனியா மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது அவ்வறிக்கையின் விபரம் வருமாறு,

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், அரசுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு மூன்று வருடங்கள் நிறைவடைந்த போதிலும் நிரந்தர சமாதான முன்னெடுப்புக்கள் மந்தநிலையையே அடைந்துள்ளன. மாறாக மீண்டும் ஓர் யுத்தம் ஏற்படுமோ என்ற பீதியே மக்கள் மத்தியில் குடிகொண்டுள்ளது.

இடைக்கால நிர்வாகசபை, மற்றும் அடிப்படை பொதுக்கட்ட மைப்பு போன்ற காரணங்கள் நிமித்தம் பேச்சுவார்த்தை இடை நிறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் மக்கள் குடியிருப்பு பகுதிகளில் வயல்நிலங்கள், பாடசாலைகள், பொதுக்கட்டடங்கள், பொதுப்போக்கு வரத்துப் பாதைகள் தொடர்ந்தும் ஆயுதப் படையினரால் ஆக்கிரமிக் கப்பட்டு தம்வசப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கு மேலாக நிரந்தர சமாதானத்தை விரும்பாத தீய சக்திக ளினால் பொதுமக்கள், அரசியல் கடமைகளில் நிராயுதபாணிகளாகக் கடமையாற்றிக்கொண்டு இருக்கின்ற தமிழீழ விடுதலைப்புலிகள் படுகொலை செய்யப்பட்டு வருகின் றனர். அத்தோடு ஆயுதப் படையி னரின் மனித உரிமை அத்துமீறல் கெடுபிடி நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு, மக்களின் இயல்புவாழ்க்கை பாதிக்கப்பட்டு, மீண்டும் மக்கள் பீதியுடனும், அச்சத் துடனும் வாழவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே நிரந்தர சமாதானத்திற்கு தடையாகவுள்ள சகல முட்டுக் கட்டைகளையும் இந்த அரசு உடைத் தெறிந்து நிரந்தர சமாதானத்திற்காக உடன் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட வேண்டும் என வலியு றுத்தும் ஓர் எழுச்சிப் பேரணி நாளை காலை 10.00 மணிக்கு வவுனியா மத்திய மகாவித்தியாலயத்தில் ஆரம்பிக்கப்பட்டு நகரசபை மைதா னத்தைச் சென்றடைந்து அங்கு மகஜர் கையளிப்பு நிகழ்வு நடை பெறும். இவ்வெழுச்சிப் பேரணியில் மக்கள் சக்தியை இவ்வுலகிற்கு எடுத்துக்காட்டுவதற்காக சகல தரப்பட்ட மக்களையும் மிகவும் உணர்வுபூர்வமாக கலந்து கொள்ளு மாறு வவுனியா மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றது. (10)

# ஊடக சுதந்திரத்தை தவறாகப் பயன்படுத்தும் ஊடகவியலாளருக்கு எதிராகச் சட்டம்

## - விரைவில் வரும் என்கிறார் அமைச்சர் அநுரா

ஊடக சுதந்திரத்தை தவறாகப் பயன்படுத்தி வரும் ஊடக வியலாளர்களுக்கு எதிராக சட்டம் ஒன்று கொண்டு வரப்படவுள்ளது என சுற்றாடல்துறை அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று நாத்தாண்டியாவில் இடம்பெற்ற பத்தாயிரம் குளங்கள் புனரமைக்கும் திட்ட நிகழ்வொன்றில் உரையாற்றிய அவர், அரசாங்கம் உரிய முறையில் நாட்டின் நிர்வாகத்தை முன்னெடுத்துச் செல்வதாகக் குறிப்பிட்டார்.

இதேவேளை அரசாங்கத்தில் இருந்துகொண்டு அரசாங்கத்தை விமர்சிக்கும் அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் அவற்றை கைவிடவேண்டும் என அநுரா பண்டாரநாயக்க கேட்டுள்ளார். இது தொடர்பில் தாம் பிரதம மந்திரியுடனும் கலந்துரையாடியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

- கொழும்பில் பிரதான கட்சிகளிடையே -

# மேதின கூட்டங்கள் நடத்துவதற்கான மைதானங்கள் ஒதுக்குவதில் இழுபறி

எதிர்வரும் மே தினத்தின் போது கூட்டங்களை நடத்துவதற்கான மைதானங்களை ஒதுக்குவதில் இரண்டு பிரதான கட்சிகள் பிரச்சி னைகளை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி ஏற்க னவே நகரசபை மைதானத்தை தமது மேதின நிகழ்விற்காக ஒதுக்கி யுள்ளது.

ஜே.வி.பியை வருடந்தோறும் பி.ஆர்.சி.மைதானத்தில் மேதின நிகழ்வை நடத்தி வந்தது

எனினும் இந்த முறை பி.ஆர்.சி. மைதான நிர்வாகம் புனரமைப்பை கருத்திற்கொண்டு ஜே.வி.பிக்கு அதனை வழங்க மறுத்துள்ளது.

இந்த நிலையில் ஜே.வி.பி, கெம்பல் மைதானத்தில் தமது மேதின நிகழ்வை நடத்த முயற்சித்த போதும் வழமையாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மேதின ஊர்வ லம் கெம்பல் மைதானத்தில் இருந்து ஆரம்பமாவதால் அதற்கு வாய்ப்பில் லாமல் போயுள்ளது. இதேவேளை தமது மேதின நிகழ்வில் சனாதிபதி பங்கேற்பதால் நகரசபை மைதா னத்தை தமக்கு விட்டுத்தருமாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சி வேண்டு கோள் விடுத்துள்ளது.

எனினும் அதற்கு ஐக்கிய தேசிய கட்சி மறுப்பு வெளியிட்டுள்ளது. இந்த நிலையில் மே தின நிகழ்வின் போது போக்குவரத்து ஒழுங்குகளை மேற்கொள்வதற்காக பிரதிப் பொலிஸ் மா அதிபர் சிறிசேன ஹேரத் தினால் இரண்டு முறை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. (32)

## அமைச்சர்கள் வெளிநாடுசெல்வதாயின் சனாதிபதியிடம் விண்ணப்பிக்க வேண்டும்

### - விண்ணப்பப் படிவங்கள் தயார்

(கொழும்பு)

அமைச்சர்கள்,பிரதி அமைச்சர்கள்வெளிநாடு செல்ல வேண்டுமானால் அதற்கான விண்ணப்பப்படிவங்களை பூர்த்திசெய்து தனது அனுமதியைப் பெறவேண்டுமென அமைச்சரவைக்கூட்டத்தில் சனாதிபதி வலியுறுத்தியுள்ளார். ஏற்கனவே வெளிநாடுகளுக்கு செல்லும் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்களுக்கு பல அறிவுரைகள் வழங்கியும் அவர்கள் இவற்றைக் கவனத்தில் எடுத்து கொள்ளாமையினால் இவர்கள் சம்பந்தமாக பல புகார்கள் எழுந்துள்ளன. எனவே தான் இந்த தீர்மானத்திற்கு வந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவை நியமிப்பதில் தாமதம் காட்டக்கூடாது

## — தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க வலியுறுத்து

சுயாதீன ஆணைக் குழு வொன்றை அமைப்பதை மேலும் தாமதப்படுத்தக் கூடாதென தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க தெரிவித்தார். 17 ஆவது அரசியல் திருத்தத்தின் மூலம் சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவை அமைப் பதற்கான காலம் குறிக்கப் படாமையினால் அதனைப்பயன் படுத்தி ஆணைக்குழுவிற்கு உறுப்பி னர்களை நியமிப்பது தாமதிக்கப் படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டி யுள்ளார். இந்த சுயாதீன ஆணைக் குழுவிற்காக ஐந்து உறுப்பினர்கள் நியமிக்கப்படவேண்டும். இந்த உறுப்பினர்களில் எவரேனும் இதுவரை முன் மொழியப்ப டவில்லை. அவர்களின் பெயர்கள் சனாதிபதிக்கு முன்வைக்கப்பட்டது. இந்தப் பெயர்கள் அரசியல்யாப்பு சபைக்கும், சனாதிபதிக்கும் அனுப் பப்பட்டது.

2001 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட 17 ஆவது அரசியல் யாப்பு திருத்தத்தில் அமைந்துள்ள மற்றைய ஆணைக்குழுக்கள் மூன்றும் தற்போது செயற்படுகின்றன. எனினும் தேர்தல் ஆணைக்குழு செயற்படவில்லை. இந்த அரசியல்யாப்பு திருத்தத்திற்கு அமைய தேர்தல் ஆணைக்குழுவை அமைப்பதற்கான காலப்பகுதி குறிப்பிடப்படவில்லை. அதனால் ஆணைக்குழுவினை நியமிப்பதில் தாமதம் ஏற்படுகின்றது. இதனை யாரேனும் ஒருவர் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார் எனவும் தேர்தல் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சனாதிபதி சந்திரிகா பிரிட்டன் பயணம்

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனிப்பட்ட விஜய மொன்றை மேற்கொண்டு பிரித்தா னியா சென்றுள்ளார்.

சனாதிபதி சந்திரிகா நாடு திரும்பும் வரை பதில் பாதுகாப்பு அமைச்சராக இரத்தினசிறி விக்கிரமநாயக்க பணியாற்றுவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# இலங்கையின் சமாதானம், உறுதிப்பாடு குறித்து சீனா தனது கடப்பாட்டை நிறைவேற்றி வருகிறது

## -சீனப்பிரதமர் சனாதிபதி சந்திரிகாவிடம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் சமாதானம் மற்றும் அதன் உறுதிப்பாடு என்பன குறித்து சீன அரசாங்கம் தொடர்ந்தும் தனது கடப்பாட்டை நிறைவேற்றி வருவதாக சீனப்பிரதமர் பென்ஜி ஜியாயோ தெரிவித்துள்ளார்.

பிராந்திய மற்றும் உலகமயப்படுத்தல் ஆகிய விடயங்களில் சீனா தனது ஒத்துழைப்பை வழங்கி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இலங்கையின் இயற்கை அனர்த்தங்களை தவிர்த்துக்கொள்ளும் வகையில் தேவையான தொழில்நுட்பம் மற்றும் பயிற்சிகளை வழங்குவதற்கான வசதிகளை செய்து கொடுக்க சீனப்பிரதமர் இச்சந்திப்பின்போது இணங்கியுள்ளதாக சனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கு இடையில் வர்த்தகத்துறை சார்ந்த விடயங்களில் தோன்றும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் கலைத்துறைக்கு தேசிய மத்திய நிலையம் ஒன்றை அமைத்துக்கொடுப்பதற்கும் சீனப்பிரதமர் உறுதி வழங்கியுள்ளார். சீனாவிற்கும், இலங்கைக்கும் இடையில் எதிர்காலத்தில் நிரந்தர உறவுகளை வைத்துக்கொள்ளும் வகையில் சகலதுறை சார்ந்த ஒத்துழைப்பையும் கவனத்தில் கொண்டு செயற்படவுள்ளதாகவும் சீனப்பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இரு நாடுகளுக்கும் இடையில் சமய மற்றும் கலாசார உறவுகளின் மூலம் நவயுகம் ஒன்றை உருவாக்க முடியுமென சீனப்பிரதமரிடம் சனாதிப்தி தெரிவித்ததாக அவ்வறிக்கையில் மேலும குறிப்பிடப்பட்டுள்ளது. ஆழிப்பேரலை அனர்த்தத்தின் போது மனிதாபிமான உதவி களையும் புனருத்தாரண நடவடிக்கைகளுக்கான உதவிகளையும் சீன அரசாங்கமும், அந்நாட்டு மக்களும் வழங்கியமைக்கு சனாதிபதி தனது நன்றியை சீனப்பிரதமரிடம் தெரிவித்துள்ளார். இலங்கைக்கு வழங்கியுள்ள கடன்களுக்கு விடுப்பு வழங்க சீனா இணங்கியுள்ளமையும், பல்வேறு கைத் தொழில் மற்றும் பொருளாதார அபிவிருத்திகளுக்கு அந்நாடு வழங்கி வரும் ஒத்துழைப்புகளும், இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கு வழி வகுக்குமென சனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

### அரசின்...

இதேவேளை இவ் ஆர்ப்பாட்டப் பேரணியில் அனைத்து வர்த்தகர்களையும் கலந்து கொள்ளுமாறு கிளிநொச்சி வர்த்தகர் சங்கத்தினர் கேட்டுள்ளனர். மேலும் அன்றைய தினம் இயல்பு வாழ்க்கையை பாதிக்காத வகையில் வர்த்தக நிலையங்கள் திறந்திருக்கும் என வாடிக்கையாளருக்கு வர்த்தகர் சங்கத்தினர் அறியத்தந்துள்ளனர்.

### புலிகளின்...

வெளியுறவு அமைச்சுகளுடனான ஆலோசனைகளின் விபரங்கள் குறித்தும் அக்குழுவினரிடம் சு.ப. தமிழ்ச்செல்வன் எடுத்துரைத்தார்.

அத்துடன் அமைதி நடவடிக்கைகளின் தற்போதைய நிலை, போர் நிறுத்த ஒப்பந்தத்தின் நிலை, சுனாமி தமிழர் தாயகப்பகுதியில் ஏற்படுத்திய அழிவுகள் குறித்தும் மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பின் தேவைகள் குறித்தும் சு.ப.தமிழ்ச்செல்வன் மேலும் விளக்கினார்.

### பூநகர்...

கிழமை ஆயுததாரிகளால் காட்டில் வைத்துப் பிடிக்கப்பட்டனர். இவர்கள் தாம் மகிந்தபுர சிறிலங்கா இராணுவ முகாம் அருகாக அதன் பின் புறமாக ஆயுததாரிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிவித்துள்னர். இதனையடுத்து இரவுவரைத் தம்மைத் தடுத்து வைத்த அவர்கள் இரவு 8.00 மணியளவில் மகிந்தபுர இராணுவ முகாமின் வேலியுடன் தம்மை முன் நிறுத்தி நகர்ந்தனர். அவ்வாறு நகர்ந்து விடுதலைப் புலிகளின் சோதனை நிலையத்திற்கு பின்புறமாக நிலையடுத்து இருந்தனரெனவும் தெரிவித்த வேட்டைக்காரர்கள் அதிகாலை வேளை தம்மை அவர்கள் விரட்டிவிட்டு விடுதலைப்புலிகளின் சோதனைச் சாவடி மீது தாக்குதலை நடத்தியதாகவும், அந்த வேட்டைக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

தாக்குதல் குழுவில் ஒன்பது பேர் இருந்ததாகவும், அவர்களில் மூவர் இராணுவச் சீருடையில் சிங்கள மொழியில் மட்டும் உரையாடியதாகவும், ஏனைய ஆறு பேர் சாதாரண உடைகளில் இருந்ததாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவர்களை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் முன்னிலையில் நேற்று சாட்சியமளிக்க ஏற்பாடாகியிருந்த போதிலும் அது நடைபெறவில்லை.

### தமிழ்...

இவரது மறைவு தொடர்பாக மேல்மாகாண மக்கள் முன்னணி விடுத்துள்ள அறிக்கையில், மறைந்த மாமனிதர் குமார் பொன்னம்பலத்துடன் இணைந்து தலைநகரில் தமிழ்த் தேசியவாதத்தையும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் நிலைப்பாட்டையும் இறுதி மூச்சுவரை தனது அரசியல் விமர்சனங்களால் நியாயப்படுத்தியதோடு மட்டுமன்றி மேல் மாகாணத் தில் தமிழ் மக்களின் தளத்தை தனித்துவமாக பேரின வாதப் பிடியிலிருந்து விடுவித்து தனித் தமிழ் ஒருமைப்பாட்டை மேல்மாகாண மக்கள் முன்னணியூடாக வெளிக்கொணர உறுதுணையாக இருந்தவர் தில்லைக் கூத்தன் நடராஜா. இவர் இலங்கைத்தமிழர் கண்ணீர், யாமார்க்கும் குடி யல்லோம் எனும் இரு நூல்களையும் இறுதிக் காலத்தில் தமிழரின் விடிவு எனும் தனது கட்டுரை தொகுப்பு நூலினையும் வெளியிட்டுள்ளார் என மேல் மாகாண மக்கள் முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

### டோக்கியோ...

தலைவர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. திறைசேரியின் முன்னாள் செயலாளரும், தூதரக அதிகாரியுமான லால் ஜயவர்த்தனவின் ஞாபகார்த்தமாக புதுடில்லியில் நடைபெற்ற ஞாபகார்த்த வைபவமொன்றில் கலந்து கொள்வதற்காக எதிர்க்கட்சித் தலைவர் இந்தியா சென்றுள்ளார். இவ்வைபவம் முடிவடைந்த பின்னர் இந்தியப்பிரதமரை புதுடில்லியில் எதிர்க்கட்சித்தலைவர் சந்தித்து கலந்துரையாடினார். இச்சந்திப்பின்போது இலங்கை-இந்தியா சம்பந்தப்பட்ட பல விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆழிப்பேரலை அனர்த்தத்தின்போது இலங்கைக்கும், தென்னிந்தியாவிற்கும் ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்தும் அதன் பின்னரான புனரமைப்பு நடவடிக்கைகள் குறித்தும் இந்தியப்பிரதமரும், சிறிலங்கா எதிர்க்கட்சித் தலைவரும் கலந்துரையாடியுள்ளார்கள். இதேவேளை எவ்வகையான சூழ்நிலையிலும் இலங்கையின் சமாதானம் தொடர்பாக இந்தியா மிக உன்னிப்பாக அவதானித்து வருவதாக இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் எதிர்க்கட்சித் தலைவரிடம் கூறியுள்ளதாக அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்புக்குறித்தும் இவ்விருவரும் விரிவாக ஆராய்ந்துள்ளார்கள். இச்சந்திப்பின்போது பாராளுமன்ற உறுப்பினர் மிலிந்த மொறகொட, இந்தியாவிற்கான சிறிலங்காத்தூதுவர் மங்கள முனசிங்க ஆகியோரும் கலந்துகொண்டனர்.

### ஆயுதத்துடன்...

பொறுப்பாளர் சி. எழிலன் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட சமயம் அந்த இராணுவச் சிப்பாயிடம் துப்பாக்கி ஒன்றும் திசையறியும் கருவியும் இருந்தன, என்றும் அவர் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளினால் தற்போது காவலில் வைக்கப்பட்டுள்ள இராணுவச் சிப்பாயின் பெயர் சிறிவர்த்தனா என்றும் 64ஆம் கட்டை இராணுவ முகாமில் இவர் பணியாற்றி வருபவர் என்றும் தெரிய வருகின்றது.

இராணுவச் சிப்பாய் ஒருவர் ஆயுதத்துடன் பிரவேசித்த போது விடுதலைப்புலிகள் போராளிகளால் பிடிக்கப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்பதை தாம் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு அறிவித்துள்ளதாகவும், மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்தார். (25)

### இலங்கையில்..

பகிர்ந்தளித்துள்ளதில் ஏதேனும் முறைகேடுகள் நடந்துள்ளனவா என ஆராய்வதே இக்கணக்காய்வின் நோக்கம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுனாமியால் பாதிக்கப்பட்டு நிவாரணம் அத்தியாவசியமாகத் தேவைப்படுபவர்கள் மட்டுமல்லாது அத்தியாவசிய நிவாரணம் தேவைப்படாதவர்களும் இந்நிதியைப் பெற்றுள்ளனரா என இங்கு ஆராயப்படவுள்ளது. அரசின் வீடமைப்புத் திட்டங்களும் சர்வதேச ரீதியில் விமர்சனங்களுக்கு இலக்காகியுள்ளன. அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஆழிப்பேரலையால் சுமார் 2,800 வீடுகள் பாதிக்கப்பட்டிருக்க அங்கு 6,000 வீடுகள் அமைக்க உத் தேசிக்கப்பட்டமை குறித்து சர்வதேச ரீதியில் விசனம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

### திருமலையில்...

நடத்தப்பட்ட தாக்குதலில் விடுதலைப் புலிகளின் உதவியாளர்ஒருவர் உயிரிழந்து இன்னொருவர் காயமடைந்தமை தெரிந்ததே.

தம்மைச் சந்தித்த போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு உறுப்பினரிடம் தாம் சில தினங்களுக்கு முன்பே, அப்பிரதேச இராணுவ முகாம்களில் கருணா அணியினர் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்ற தகவலை கூறியிருந்ததையும் எழிலன் நினைவுபடுத்தினார்.

தாக்குதல் நடத்தியவர்கள், வேட்டைக்குச் சென்றுவிட்டு திரும்பிய இரண்டு ஊர்வாசிகளை தடுத்து வைத்திருந்துவிட்டு பின்னர் செல்ல அனுமதித்தனர் என்ற தகவலையும் எழிலன் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் தெரிவித்தார். அவர்கள் இருவரையும் தாங்கள் நேரில் விசாரணை செய்வர் என்று கண்காணிப்புக்குழுவினர் எழிலனிடம் கூறினார்கள். இச்சந்திப்பு ஒருமணி நேரம் நீடித்தது. (25)


## தொழில்சார் கல்வி வழிகாட்டல் ஆற்றல் மேம்படுத்துகை-2005

மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் இலக்கிய மன்றத்தினர் தமிழீழ மாணவர் அமைப்பின் அனுசரனையுடன் கிளிநொச்சி, முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, மல்லாவி, மாவட்டங்களில் "ஆற்றல் மேம்படுத்துகை கருத்தரங்கு" ஒன்றினை நடாத்தவுள்ளனர். இக்கருத்தரங்கிலே பின்வரும் முக்கியமான விடயங்களைப் பற்றி கலந்துரையாடப்படவுள்ளன.

01) உயர்தரபரீட்சையில் சித்தியெய்திய மாணவர்கள், பல்கலைக கழக பாடநெறிகளைத் தெரிவு செய்யும் வழிமுறைகள்.
02) பல்கலைக்கழகங்களிற்கு அனுமதிபெறத்தவறியவர்களுக்கு உயர்தரப் படிப்பினைத் தொடங்குவதற்கானஆலோசனைகள்.
03) ஆங்கில மொழிதொடர்பான பிரச்சினைகளும் அவற்றிற்கான தீர்வுகளும்.
04) கற்றலை இலகுவாக்கும் வழிமுறைகள்.
05) தனிமனித ஆளுமையை மேம்படுத்தும் வழிமுறைகள்.

மேற்படி நிகழ்வுகள் நடைபெறும் இடங்கள்

| மாவட்டம் | கல்லூரி | காலம் | நேரம் |
|---|---|---|---|
| கிளிநொச்சி | கி/கிளிநொச்சிமத்திய கல்லூரி | 11.04.2005 | 8.30-4.30 |
| முல்லைத்தீவு | மு/மல்லாவி மத்திய கல்லூரி | 11.042005 | 8.30-4.30 |
| முல்லைத்தீவு | மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி | 12.04.2005 | 8.30-4.30 |

மேற்படி கருத்தரங்கில் மாணவர்கள், ஆர்வலர்களை கலந்து பயன்பெறுமாறு வேண்டப்படுகின்றனர்.

தலைவர்

(5989)



IIS CITY CAMPUS

## MBA

(Master of Business Administration)

Manipal பல்கலைக்கழகத்தின் மேற்படி கற்கை நெறி எமது நிறுவனத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. யாழ். குடாநாட்டில் பயில விரும்புவோர் அல்லது கற்கைநெறி தொடர்பாக ஆர்வம் உடையோருக்கான கருத்தரங்கு ஒன்று நடாத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. மேற்படி கருத்தரங்கில் பல்கலைக்கழகத்தின் இலங்கைக்கான பிரதிநிதிகளும் கலந்து கொள்ள உள்ளார்கள்.

இடம்: IIS பிரதான மண்டபம்
#100, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

காலம்: 16.04.2005
மாலை 03.00 மணி

ஆர்வமுடையோர் பங்கு பற்றிப் பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்

மேலதிக விபரங்களுக்கு :
Mrs. Chelvy Suntheresen,
Centre Manager
T.P : 021 222 8060

(சி-11495)

Director
IIS City Campus,
# 181, Navalar Road, Jaffna.


## சாவு அறிவித்தல்

### வாரித்தம்பி சுப்பிரமணியம்

பூநகரி மணியம்



அல்லிப்பளையைச் சொந்த இடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வாரித்தம்பி சுப்பிரமணியம் 08.04.2005 காலமாகிவிட்டார். அன்னாரது ஈமைக் கிரியைகள் 10.04.2005 (ஞாயிறு) 10.00 மணியளவில் பளை அறநிதிநகர் இந்து மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:-
குடும்பத்தினர்.

(5986)